5. தேவநேயப்பாவாணர், அகரமுதலி, பாவலரேறு பெருஞ்சித்திரனார், ஜி.யு.போப், வீரமாமுனிவர் தமிழ்த்தொண்டு தொடர்பான செய்திகள்

புதுசு

தமிழ்ச்சொல் வளம்
பத்தாம் வகுப்பு - உரைநடை

தேவநேயப்பாவாணர்

- மொழிஞாயிறு என்றழைக்கப்படுபவர்.
- பல்வேறு இலக்கணக் கட்டுரைகளையும் மொழியாராய்ச்சிக் கட்டுரைகளையும் எழுதியவர்.
- தமிழ்ச் சொல்லாராய்ச்சியில் உச்சம் தொட்டவர்.
- செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்குநராகப் பணியாற்றியவர்.
- உலகத் தமிழ்க் கழகத்தை நிறுவித் தலைவராக இருந்தவர்.
- சொல்லாய்வுக் கட்டுரைகள் என்னும் நூலினை இயற்றியுள்ளார்.

TNPSC Old Questions
பொதுத்தமிழ்

தமிழ்ச் சொல்லாராய்ச்சியில் உச்சம் தொட்டவர் (CCSE2T/2024)

அ) கால்டுவெல் ஆ) தேவநேயப் பாவாணர்
இ) ம.பொ.சி ஈ) உ.வே.சா
உ) விடை தெரியவில்லை

சரியானதைக் கண்டறிக. (CCS3T-2023)

I. தேவநேயப்பாவாணர் - அகர முதலித் திட்ட இயக்குநராகப் பணியாற்றினார்.
II. தமிழ்ச் சொல்லாராய்ச்சியில் உச்சம் தொட்டவர்
III. உலகத் தமிழ்க் கழகத்தை நிறுவி இயக்குநராக இருந்தார்
IV. செந்தமிழ் சொற்பிறப்பியல் அகரமுதலித் தலைவராக இருந்தார்.

அ) I மற்றும் II ஆ) I, II, III மட்டும்
இ) III மற்றும் IV **ஈ) அனைத்தும் சரி**
உ) விடை தெரியவில்லை

தேவநேயப்பாவாணர் (EO3GS-2022)

கூற்று (i): 'மொழிஞாயிறு' என்றழைக்கப்படுகிறார்.
கூற்று (ii): செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்குநராகப் பணியாற்றியவர்.
கூற்று (iii): 'பள்ளிப் பறவைகள்' என்ற நூலை எழுதியவர்

அ) கூற்று (i) மற்றும் (iii) சரி
ஆ) கூற்று (ii) மற்றும் (iii) சரி
இ) கூற்று (i) மட்டும் சரி
ஈ) கூற்று (i) மற்றும் (ii) சரி
உ) விடை தெரியவில்லை

(தேவநேயப் பாவாணரின் 'சொல்லாய்வுக் கட்டுரைகள்' நூலில் உள்ள தமிழ்ச்சொல் வளம் என்னும் கட்டுரையின் சுருக்கம் பாடமாக இடம்பெற்றுள்ளது.)

'நாடும் மொழியும் நமதிரு கண்கள்' என்கிறார் மகாகவி பாரதியார். காலவெள்ளத்தில் கரைந்துபோன மொழிகளுக்கிடையில் நீந்தித் தன்னை நிலைநிறுத்திக் கொண்டுள்ளது தமிழ். என்ன வளம் இல்லை என்று எண்ணி வியக்கத்தக்கவாறு பல்வேறு சிறப்பியல்புகளைக் கொண்டு இலங்குகிறது நம் செந்தமிழ் மொழி. அனைத்து வளமும் உண்டென்று விடை பகர்கிறது, தமிழ்ச்சொல் வளம்.

சொல்வளம் இலக்கியச் செம்மொழிகளுக்கெல்லாம் பொதுவேனும், தமிழ்மட்டும் அதில் தலைசிறந்ததாகும்.

TNPSC Old Questions
பொதுத்தமிழ்

'நாடும் மொழியும் நமதிரு கண்கள்' எனப் புகழ்ந்துரைத்த கவிஞர் (EO3GS-2022)

அ) தேவநேயப்பாவாணர்
ஆ) சந்தக்கவிமணி தமிழழகனார்
இ) பாரதியார்
ஈ) நாமக்கல் கவிஞர்
உ) விடை தெரியவில்லை

'தமிழல்லாத திராவிட மொழிகளின் அகராதிகளை ஆராயும்போது, தமிழிலுள்ள ஒருபொருட் பலசொல் வரிசைகள் அவற்றில் இல்லாக்குறை எந்தத் தமிழறிஞர்க்கும் மிகத்தெளிவாகத் தோன்றும். தமிழில் மட்டும் பயன்படுத்தப்பட்டுத் தமிழுக்கே சிறப்பாக உரியனவாகக் கருதப்படும் சொற்கள் மட்டுமன்றித் தெலுங்கு, கன்னடம் முதலிய பிற திராவிட மொழிகளுக்குரியனவாகக் கருதப்படும் சொற்களும் தமிழில்உள' என்கிறார் கால்டுவெல் (திராவிட மொழிகளின் ஒப்பியல் இலக்கணம்).

தமிழ்ச்சொல் வளத்தைப் பலதுறைகளிலும் காணலாமேனும், இங்குப் பயிர்வகைச் சொற்கள் மட்டும் சிறப்பாக எடுத்துக்காட்டப்பெறும்.

அடி வகை

ஒரு தாவரத்தின் அடிப்பகுதியைக் குறிப்பதற்கான சொற்கள்.

தாள்	நெல், கேழ்வரகு முதலியவற்றின் அடி
தண்டு	கீரை, வாழை முதலியவற்றின் அடி
கோல்	நெட்டி, மிளகாய்ச்செடி முதலியவற்றின் அடி
தூறு	குத்துச்செடி, புதர் முதலியவற்றின் அடி
தட்டு (அ) தட்டை	கம்பு, சோளம் முதலியவற்றின் அடி
கழி	கரும்பின் அடி
கழை	மூங்கிலின் அடி
அடி	புளி, வேம்பு முதலியவற்றின் அடி

TNPSC Old Questions
கட்டாயத் தமிழ்

அடிவகைகளில் தவறான இணை எது? (DPGS/2022)

அ) தாள் - கேழ்வரகு
ஆ) தூறு - புதர்
இ) தண்டு - வாழை
ஈ) கோல் - குத்துச்செடி

கிளைப்பிரிவுகள்

தாவரங்களின் அடியிலிருந்து பிரிந்து செல்லும் பிரிவுகளுக்கும் வழங்கும் சொற்கள்.

கவை	அடி மரத்தினின்று பிரியும் மாபெரும் கிளை
கொம்பு அல்லது கொப்பு	கவையின் பிரிவு
கிளை	கொம்பின் பிரிவு
சினை	கிளையின் பிரிவு
போத்து	சினையின் பிரிவு
குச்சு	போத்தின் பிரிவு
இணுக்கு	குச்சியின் பிரிவு

காய்ந்த அடியும் கிளையும் பெயர்பெறுதல்

காய்ந்த தாவரத்தின் பகுதிகளுக்கு வழங்கும் சொற்கள்.

சுள்ளி	காய்ந்த குச்சு (குச்சி)
விறகு	காய்ந்த சிறுகிளை
வெங்கழி	காய்ந்த கழி
கட்டை	காய்ந்த கொம்பும் கவையும் அடியும்

இலை வகை

தாவரங்களின் இலை வகைகளைக் குறிக்கும் சொற்கள்.

இலை	புளி, வேம்பு முதலியவற்றின் இலை
தாள்	நெல், புல் முதலியவற்றின் இலை
தோகை	சோளம், கரும்பு முதலியவற்றின் இலை
ஓலை	தென்னை, பனை முதலியவற்றின் இலை
சண்டு	காய்ந்த தாளும் தோகையும்
சருகு	காய்ந்த இலை

கொழுந்து வகை

தாவரத்தின் நுனிப்பகுதிகளைக் குறிக்கும் சொற்கள்.

துளிர் (அ) தளிர்	நெல், புல் முதலியவற்றின் கொழுந்து
முறி (அ) கொழுந்து	புளி, வேம்பு முதலியவற்றின் கொழுந்து
குருத்து	சோளம், கரும்பு, தென்னை, பனை முதலியவற்றின் கொழுந்து
கொழுந்தாடை	கரும்பின் நுனிப்பகுதி

TNPSC Old Questions
கட்டாயத் தமிழ்

முறி, குருத்து, கொழுந்தாடை முதலிய சொற்கள் தாவரத்தின் __________ பகுதியைக் குறிக்கும். (HOGS/2023)

அ) நுனிப்பகுதி ஆ) இலை
இ) கிளை ஈ) வேர்

பூவின் நிலைகள்

பூவின் நிலைகளைக் குறிக்கும் சொற்கள்.

அரும்பு	பூவின் தோற்றநிலை
போது	பூ விரியத் தொடங்கும் நிலை
மலர் (அலர்)	பூவின் மலர்ந்த நிலை
வீ	மரஞ்செடியினின்று பூ கீழேவிழுந்த நிலை
செம்மல்	பூ வாடின நிலை

TNPSC Old Questions
கட்டாயத் தமிழ்

ஒரு பொருள் தரும் பல சொற்கள் (IFGS/2023)
போது, அலர், வீ, செம்மல் ஆகிய சொற்கள் எதனைக் குறிக்கும்?

அ) பூவின் நிலைகள் ஆ) இளம் பயிர் வகைகள்
இ) பிஞ்சு வகைகள் ஈ) இலை வகைகள்

'செம்மல்' என்பதன் பொருள் தருக. (AOGS/2023)

அ) பூ வாடின நிலை
ஆ) பூவின் மலர்ந்த நிலை
இ) பூவின் தோற்ற நிலை
ஈ) பூவின் விரியத் தொடங்கும் நிலை

பிஞ்சு வகை

தாவரத்தின் பிஞ்சு வகைகளுக்கு வழங்கும் சொற்கள்.

பூம்பிஞ்சு	பூவோடு கூடிய இளம்பிஞ்சு
பிஞ்சு	இளம் காய்
வடு	மாம்பிஞ்சு

மூசு	பலாப்பிஞ்சு
கவ்வை	எள்பிஞ்சு
குரும்பை	தென்னை, பனை முதலியவற்றின் இளம் பிஞ்சு
முட்டுக் குரும்பை	சிறு குரும்பை
இளநீர்	முற்றாத தேங்காய்
நுழாய்	இளம்பாக்கு
கருக்கல்	இளநெல்
கச்சல்	வாழைப்பிஞ்சு

TNPSC Old Questions
கட்டாயத் தமிழ்

பொருந்தாச் சொல்லைக் கண்டறிக. (HOGS/2023)
பிஞ்சு வகைகளில் பொருந்தாததை எடுத்து எழுதுக.
அ) வடு ஆ) குரும்பை
இ) கருக்கல் ஈ) **கொப்பு**

தாவரத்தின் பிஞ்சு வகைகளுள் இடம்பெறாத சொல் தேர்க. (LEGS/2023)
அ) வடு ஆ) மூசு
இ) கவ்வை ஈ) **தாறு**

வடு, மூசு, குரும்பை, கச்சல் ஆகிய சொற்கள் எதனைக் குறிக்கும்? (ADGS/2022)
அ) **பிஞ்சு வகை** ஆ) காய் வகை
இ) கனி வகை ஈ) குலை வகை

குலை வகை

தாவரங்களின் குலை வகைகளைக் குறிப்பதற்கான (காய்களையோ கனிகளையோ) சொற்கள்.

கொத்து	அவரை, துவரை முதலியவற்றின் குலை
குலை	கொடி முந்திரி போன்றவற்றின் குலை
தாறு	வாழைக் குலை
கதிர்	கேழ்வரகு, சோளம் முதலியவற்றின் கதிர்
அலகு அல்லது குரல்	நெல், தினை முதலியவற்றின் கதிர்
சீப்பு	வாழைத் தாற்றின் பகுதி

கெட்டுப்போன காய்கனி வகை

கெட்டுப்போன காய்க்கும் கனிக்கும் தாவரத்திற்கேற்ப வழங்கும் சொற்கள்.

தும்பல்	நுனியில் சுருங்கிய காய்
சிவியல்	சுருங்கிய பழம்
சொத்தை	புழுபூச்சி அரித்த காய் அல்லது கனி
வெம்பல்	தட்டினால் பழுத்த பிஞ்சு
அளியல்	குளுகுளுத்த பழம்
அழுகல்	குளுகுளுத்து நாறிய பழம் அல்லது காய்
சொண்டு	பதராய்ப் போன மிளகாய்
கோட்டான் காய் அல்லது கூகைக்காய்	கோட்டான் உட்கார்ந்ததினால் கெட்ட காய்
தேரைக்காய்	தேரை அமர்ந்ததினால் கெட்டகாய்
அல்லிக்காய்	தேரை அமர்ந்ததினால் கெட்ட தேங்காய்
ஒல்லிக்காய்	தென்னையில் கெட்ட காய்

TNPSC Old Questions
கட்டாயத் தமிழ்

பொருத்தமான பொருளைத் தேர்ந்தெடுக்க. (CSGS/2023)
கீழ் கொடுக்கப்பட்டுள்ளவற்றில் நுனியில் சுருங்கிய காய் எது?
அ) அழுகல் ஆ) அளியல்
இ) **தும்பல்** ஈ) தேரைக்காய்

பழத்தோல் வகை

பழங்களின் மேற்பகுதியினைக் குறிக்க வழங்கும் சொற்கள்.

தொலி	மிக மெல்லியது
தோல்	திண்ணமானது
தோடு	வன்மையானது
ஓடு	மிக வன்மையானது
குடுக்கை	சுரையின் ஓடு
மட்டை	தேங்காய் நெற்றின் மேற்பகுதி
உமி	நெல்,கம்பு முதலியவற்றின் மூடி
கொம்மை	வரகு, கேழ்வரகு முதலியவற்றின் உமி

TNPSC Old Questions
கட்டாயத் தமிழ்

தொலி, தோல், தோடு, ஓடு ஆகிய சொற்கள் எதனைக் குறிக்கின்றன. (APPGS/2023)
அ) காய்களின் மேற்பகுதி
ஆ) விடுகளின் மேற்பகுதி
இ) **பழங்களின் மேற்பகுதி**
ஈ) மரங்களின் மேற்பகுதி

மணிவகை

தானியங்களுக்கு வழங்கும் சொற்கள்.

கூலம்	நெல்,புல் (கம்பு) முதலிய தானியங்கள்
பயறு	அவரை, உளுந்து முதலியவை
கடலை	வேர்க்கடலை, கொண்டைக்கடலை முதலியவை
விதை	கத்தரி, மிளகாய் முதலியவற்றின் வித்து
காழ்	புளி, காஞ்சிரை (நச்சு மரம்) முதலியவற்றின் வித்து
முத்து	வேம்பு, ஆமணக்கு முதலியவற்றின் வித்து
கொட்டை	மா, பனை முதலியவற்றின் வித்து
தேங்காய்	தென்னையின் வித்து
முதிரை	அவரை, துவரை முதலிய பயறுகள்.

TNPSC Old Questions
கட்டாயத் தமிழ்

தானியங்களைக் குறிக்கும் சொல் அல்லாதது (RAGS/2023)
அ) கூலம்
ஆ) பயறு
இ) முதிரை
ஈ) சிவியல்

ஒரு பொருள் தரும் பல சொற்கள் (BEGS/2023)
கூலம், காழ், முத்து, முதிரை ஆகிய சொற்கள் எதனை உணர்த்துகின்றன?
அ) இளம் பயிர் வகை
ஆ) மணி வகை
இ) காய் வகை
ஈ) குலை வகை

இளம் பயிர் வகை

தாவரங்களின் இளம் பருவத்திற்கான சொற்கள்.

நாற்று	நெல், கத்தரி முதலியவற்றின் இளநிலை
கன்று	மா, புளி, வாழை முதலியவற்றின் இளநிலை
குருத்து	வாழையின் இளநிலை
பிள்ளை	தென்னையின் இளநிலை
குட்டி	விளாவின் இளநிலை
மடலி (அ) வடலி	பனையின் இளநிலை
பைங்கூழ்	நெல், சோளம் முதலியவற்றின் பசும் பயிர்

TNPSC Old Questions
கட்டாயத் தமிழ்

குட்டி, பிள்ளை, மடலி, வடலி ஆகிய சொற்கள் எதனைக் குறிக்கும்? (GSGS/2023)
அ) தாவரங்களின் இளநிலை
ஆ) ஆண்களின் இளநிலை
இ) விலங்குகளின் இளநிலை
ஈ) பெண்களின் இளநிலை

மடலி அல்லது வடலி என்பதனைக் குறிக்கும் பொருள் தேர்க. (GSTP/2022)
அ) தென்னையின் இளநிலை
ஆ) பனையின் இளநிலை
இ) மாமரத்தின் இளநிலை
ஈ) பலா மரத்தின் இளநிலை

மரபுப் பிழையற்றதை எடுத்து எழுதுக (AOGS/2022)
அ) பனை வடலி
ஆ) தென்னங்கன்று
இ) விளாங்கூழ்
ஈ) வாழை நாற்று

தாவரத்தின் இளம் பயிர் வகையை சுட்டாத சொல் எது? (SDGS/2022)
அ) நாற்று
ஆ) இளநீர்
இ) குருத்து
ஈ) பிள்ளை

ஒரு பொருள் தரும் பல சொற்கள் பிள்ளை, குட்டி, மடலி, வடலி, கன்று ஆகிய சொற்கள் எதனைக் குறிக்கும்? (REGS/2022)
அ) இளம் விலங்கினம்
ஆ) இலைகள்
இ) தென்னை ஓலை
ஈ) இளம் பயிர் வகை

இதுகாறுங் கூறியவற்றால் தமிழ், சொல் வளமுடையதென்றும் தமிழ்நாடு பொருள் வளமுடையதென்றும் தெள்ளிதின் விளங்கும்.

ஒரு மொழி, பொதுமக்களாலும் அதன் இலக்கியம், பல மக்களாலும் அமையப்பெறும். தமிழ்ப் பொதுமக்கள் உயர்ந்த பகுத்தறிவுடையர். எத்துணையோ ஆராய்ச்சி நடந்துவரும் இக்காலத்திலும் எத்துணையோ மொழிகளினின்று கடன்கொண்ட ஆங்கில மொழியிலும் நூலிலும் இலையைக் குறிக்க Leaf என ஒரேசொல் உள்ளது. ஆங்கில நூல்களிலும் வேறுபல வகைகளில் இலைகளைப் பாகுபாடு செய்தனரேயன்றி, தமிழ்ப் பொதுமக்களைப் போல வன்மை மென்மை பற்றித் தாள், இலை, தோகை, ஓலை எனப் பாகுபாடு செய்தாரில்லை. இத்தகைய பாகுபாடு ஏனைய உறுப்புகளுக்குள்ளும் செய்யப்பட்டது முன்னர்க் காட்டப்பெற்றது.

தமிழ்நாடு எத்துணைப் பொருள்வளமுடையதென்பது, அதன் விளைபொருள் வகைகளை நோக்கினாலே விளங்கும். பிறநாடுகளிலுள்ள கூலங்களெல்லாம் சிலவாகவும் சில்வகைப்பட்டனவாகவுமிருக்க, தமிழ்நாட்டிலுள்ளவையோ, பலவாகவும் கழிபல வகைப்பட்டனவாகவும் இருக்கின்றன. எடுத்துக்காட்டாக, கோதுமையை எடுத்துக்கொள்ளின் அதில் சம்பாக்கோதுமை, குண்டுக்கோதுமை, வாற்கோதுமை முதலிய சிலவகைகளேயுண்டு. ஆனால், தமிழ்நாட்டு நெல்லிலோ, செந்நெல், வெண்ணெல், கார்நெல் என்றும் சம்பா, மட்டை, கார் என்றும் பல வகைகள் இருப்பதுடன் அவற்றுள் சம்பாவில் மட்டும் ஆவிரம்பூச்சம்பா, ஆனைக்கொம்பன் சம்பா, குண்டுச்சம்பா, குதிரைவாலிச்சம்பா, சிறுமணிச்சம்பா, சீரகச்சம்பா முதலிய அறுபது உள்வகைகள் உள்ளன. இவற்றோடு வரகு, காடைக்கண்ணி, குதிரைவாலி முதலிய சிறுகூலங்கள் தமிழ்நாட்டிலன்றி வேறெங்கும் விளைவதில்லை. தமிழ்நாட்டுள்ளும் தென்னாட்டிலேயே அவை விளைகின்றன. பழங்காலத்தில் விளைந்த அளவு பொன்னும் மணியும் முத்தும் பவளமும் இன்று விளையாவிடினும் அருமையான கூலங்களும் சிறுகூலங்களும் இன்றும் தென்றமிழ் நாட்டில் விளைந்து வருவது கண்கூடு.

> உலகத்திலேயே ஒரு மொழிக்காக உலக மாநாடு நடத்திய முதல் நாடு மலேசியாவே. மாநாட்டுக்குரிய அம்முதல் மொழியும் தமிழே. (பன்மொழிப் புலவர் க.அப்பாத்துரையார்)

TNPSC Old Questions
கட்டாயத் தமிழ்

கூற்று - சரியா? தவறா? (AFGS/2022)
1. உலகிலேயே ஒரு மொழிக்காக உலக மாநாடு நடத்திய முதல் நாடு மலேசியா.
2. மாநாட்டுக்குரிய மொழி தமிழ்.

அ) கூற்று 1, 2 தவறு
ஆ) கூற்று 1 மட்டும் சரி
இ) கூற்று 1, 2 சரி
ஈ) கூற்று 2 மட்டும் சரி

பொருந்தா இணை எது? (VCGS/2022)

அ) தூறு	-	புதரின் அடிப்பகுதி
ஆ) வெங்கழி	-	காய்ந்த கழி
இ) செம்மல்	-	வாடிய பூ
ஈ) கொழுந்தாடை	**-**	**காய்ந்த கட்டை**

ஒரு நாட்டு வளத்திற்குத் தக்கபடியே, அந்நாட்டு மக்களின் அறிவொழுக்கங்களும் அமைந்திருக்கும்.

நாட்டின் தனிப்பெரும் வளத்தினாலேயே, பண்டைத் தமிழ்மக்கள் தனிப்பெரும் நாகரிகத்தை உடையவராக இருந்திருக்கின்றனர் என அறிக.

திருந்திய மக்களை மற்ற உயிரினின்றும் பிரித்துக் காட்டுவது மொழியாதலின், அதுவே ஒரு நாட்டாரின் அல்லது இனத்தாரின் நாகரிகத்தை அளந்தறிவதற்கும் சிறந்த வழியாகும். பொருளைக் கூர்ந்து நோக்கி நுண்பாகுபாடு செய்து அவற்றிற்கேற்பப் பருப்பொருட் சொற்களும் நுண்பொருட்சொற்களும் அமைத்துக்கொள்வது, சிறந்த மதிநுட்பமும் பண்பாடும் உடைய மக்கட்கே இயலும்.

பாவாணர், **தமிழ்ச்சொல்வளம்** கட்டுரையில் வித்துவகை, வேர்வகை, அரித்தாள் வகை, காய்ந்த இலைவகை, இலைக்காம்பு வகை, பூமடல் வகை, அரும்பு வகை, பூக்காம்பு வகை, இதழ்வகை, காய்வகை, கனி வகை, உள்ளீட்டு வகை, தாவரக் கழிவு வகை, விதைத்தோல் வகை, பதர் வகை, பயிர் வகை, கொடி வகை, மர வகை, கரும்பு வகை, காய்ந்த பயிர் வகை, வெட்டிய விறகுத்துண்டு வகை, மரப்பட்டை வகை, பயிர்ச்செறிவு வகை, நிலத்தின் தொகுப்பு வகை, செய் வகை, நில வகை, நன்செய் வகை, வேலி வகை, காட்டு வகை ஆகியவற்றின் சொல்வளங்களையும் விளக்கியுள்ளார்.

பழகு

தேவநேயப் பாவாணர்

எட்டாம் வகுப்பு - உரைநடை

பால் வாங்கிக்கொண்டு தெருவில் வந்தவர்மீது மிதிவண்டியொன்று மோதியது; அதனால், அவர் செம்பிலிருந்த பால் சிந்தியது; கை கால்களில் சிறு சிறு காயங்கள் ஏற்பட்டன. மிதிவண்டிக்காரர், "ஐயா, மன்னித்துக் கொள்க" என்றார். அதற்கு அவர், **மன்னிப்பு உருதுச்சொல்; பொறுத்துக்கொள்க** எனத் தமிழில் சொல்லுங்கள் எனக் கூறி, மிதிவண்டிக்காரரையும் சொல்லச் செய்தார். அவர்தாம் அன்னைத் தமிழுக்கு அரும்பணியாற்றிய தேவநேயப்பாவாணர்.

TNPSC Old Questions
பொதுத்தமிழ்

மன்னிப்பு - எம்மொழிச் சொல் (CCSFT-2018)

அ) தமிழ் ஆ) தெலுங்கு
இ) மலையாளம் **ஈ) உருது**

தமிழின் தொன்மையை உலகறியச் செய்தவர் கால்டுவெல். தனித்தமிழுக்கு வித்திட்டவர் பரிதிமாற்கலைஞர். தமிழைத் தழைக்கச் செய்த செம்மல் மறைமலையடிகள். **தமிழை ஆலென வளர்த்து மாண்புறச் செய்தவர் தேவநேயப்பாவாணர்.**

TNPSC Old Questions
பொதுத்தமிழ்

தமிழை ஆலென வளர்த்து மாண்புறச் செய்தவர் யார்? (EO3GT-2019)

அ) பரணர் ஆ) பாரி
இ) தேவநேயப்பாவாணர் ஈ) பெருந்தேவர்

வினாவிற்குரிய விடை எழுதுக : (GROUP 4 - 2013)
தமிழை ஆலென வளர்த்து மாண்புறச் செய்தவர் யார்?

அ) பரிதிமாற்கலைஞர் ஆ) மு.வ
இ) தேவநேயப்பாவாணர் ஈ) புதுமைப்பித்தன்

மொழிஞாயிறு தேவநேயப்பாவாணர் தனித்தமிழ் ஊற்று; செந்தமிழ் ஞாயிறு; இலக்கியப் பெட்டகம்; இலக்கணச் செம்மல்; தமிழ்மானங் காத்தவர்; தமிழ், தமிழர் நலம் காப்பதனையே உயிர்மூச்சாகக் கொண்டவர்.

உலக முதன்மொழி தமிழ்; இந்திய மொழிகளுக்கும் மூலமும் வேரும் தமிழ்; திராவிட மொழிகளுக்குத் தாய்மொழி தமிழ் என வாழ்நாள் முழுவதும் ஆய்வுசெய்து நிறுவிய செம்மல் தேவநேயப் பாவாணர். **உலகின் முதல் மாந்தன் தமிழன்; தமிழன் தோன்றிய இடம் குமரிக்கண்டமே** என்பதும் மொகஞ்சதாரோ, அரப்பா நாகரிகம் பழந்தமிழர் நாகரிகமே என்பதும் பாவாணரது ஆய்வுப்புலத்தின் இரு கண்களாம். அவர்,

தமிழை, வடமொழி வல்லாண்மையினின்றும் மீட்பதற்காகவே இறைவன் என்னைப் படைத்தான் என்று கூறினார்.

TNPSC Old Questions
பொதுத்தமிழ்

"தமிழ் மொழியை வடமொழி வல்லாண்மையினின்றும் மீட்பதற்காகவே இறைவன் என்னைப் படைத்தான்" என்று கூறியவர் யார்? (JGT-19)
அ) தேவநேயப்பாவாணர்
ஆ) பரிதிமாற்கலைஞர்
இ) குணங்குடி மஸ்தான் சாகிபு
ஈ) மகாகவி பாரதியார்

விடை தேர்க : (EOGT-2013)
"தமிழை வடமொழி வல்லாண்மையினின்றும் மீட்பதற்காகவே இறைவன் என்னைப் படைத்தான்" என்று கூறியவர் யார்?
அ) மறைமலையடிகள் ஆ) தேவநேயப்பாவாணர்
இ) பரிதிமாற்கலைஞர் ஈ) பெருஞ்சித்திரனார்

பெற்றோர் : ஞானமுத்து - பரிபூரணம்
ஊர் : சங்கரன்கோவில்
கல்வி : பண்டிதர், புலவர், வித்துவான், முதுகலைத் தமிழ், பி.ஓ.எல்.,
காலம் : 07.02.1902 - 15.01.1981
சிறப்பு : செந்தமிழ்ச் செல்வர், செந்தமிழ் ஞாயிறு, தமிழ்ப்பெருங் காவலர் என 174 சிறப்புப் பெயர்கள்.

TNPSC Old Questions
பொதுத்தமிழ்

'தமிழ்ப் பெருங்காவலர் என்ற சிறப்புப் பெயருக்குரியவர் யார்? (CCSE4GT/2024)
அ) மறைமலையடிகள் ஆ) பேரா. தனிநாயகம்
இ) தேவநேயப்பாவாணர் ஈ) உ.வே. சாமிநாதர்

கீழ்க்கண்டவற்றுள் தேவநேயப்பாவாணரின் சிறப்புகளில் பொருந்தாததை தேர்ந்தெடு (CCSFT-2018)
அ) செந்தமிழ் ஞாயிறு ஆ) செந்தமிழ்ச் செல்வர்
இ) இலக்கியச் செம்மல் ஈ) தமிழ்ப்பெருங்காவலர்

கோவில்களில் தமிழில் வழிபாடு நடைபெற வேண்டும் எனவும், பிறப்பு, இறப்புத் தொடர்பான சடங்குகள் யாவும் தமிழில் நடைபெறவேண்டும் எனவும் பாவாணர் வலியுறுத்தினார். அவர், ஒருமுறை ஆசிரிய நண்பர் சிலருடன் தாரைமங்கலம் (தாரமங்கலம்) என்னும் ஊருக்குச் சென்று, அங்கே இரவு தங்கிவிட்டு மறுநாள் காலையில் திரும்பினார். அவரை அன்பர் சிலர் சூழ்ந்துகொண்டு, ஊர்சென்று வந்ததனைப் பற்றிக் கேட்டனர். அவருள் ஒருவர், ஐயா பகலுணவும் இராவுணவும் எவ்வாறு இருந்தன? எனக் கேட்டார். பாவாணர் **பகலுணவு, பகல் உணவாகவும், இராவுணவு இரா உணவாகவும்** இருந்தன என்றார்.

பகல் உணவு என்பதில், பகலில் கிடைத்த சிறிதளவு உணவையே அனைவரும் பகுத்துண்ண நேர்ந்ததெனவும், இரா உணவு என்பதனில், அனைவரும் உணவின்றி இரவைக் கழிக்க வேண்டியிருந்தது எனவும் உணர்ந்துகொண்டனர். தமிழ் வளர்த்தால் பசியும் பட்டினியும் பஞ்சாய்ப் பறந்துவிடும் என எண்ணியவர் பாவாணர்.

சொற்றொகுப்புக் கருதி நீலமலைக்குச் (நீலகிரி) சென்றார் பாவாணர். ஆங்குப் பாவாணரிடம் பெரும்பற்றுக்கொண்ட கிருட்டினையா என்பார் இல்லத்தில் தங்கியிருந்தார். காலை உணவுக்குப் பின் பாவாணரை வீட்டில் தங்கவைத்துவிட்டுக் காட்டுக்குச் சென்று திரும்பினார் கிருட்டினையா. மீள வந்தபோது பாவாணர் வேட்டியை வரிந்து கட்டிக்கொண்டு வீட்டின்முன்னால் கிடந்த விறகுக்கட்டையைக் கோடரியால் பிளந்து கொண்டிருப்பதனைக் கண்டு "இதனை நீங்கள் ஏன் செய்கிறீர்கள்? விடுங்கள்" எனத் தடுத்தார் கிருட்டினையா. ஒன்றுமில்லை, **உண்ட வீட்டிற்கு ஏதாவது செய்தல் வேண்டும்; உட்கார்ந்து கொண்டு உண்டு செல்வது நன்றாகாது** என்றார்.

தேவநேயப்பாவாணரின் படைப்புப் பணி

பாவாணர், தமிழ் வரலாறு, முதல் தாய்மொழி, தமிழ்நாட்டு விளையாட்டுகள், தமிழர் திருமணம், வடமொழி வரலாறு, தமிழர் மதம், மண்ணிலே விண், பண்டைத் தமிழர் நாகரிகமும் பண்பாடும், உயர்தரக்கட்டுரை இலக்கணம், சொல்லாராய்ச்சிக் கட்டுரைகள், திருக்குறள் மரபுரை முதலான நாற்பத்துமூன்று நூல்களைப் படைத்துள்ளார்.

TNPSC Old Questions
பொதுத்தமிழ்

தேவநேயப் பாவாணர் எத்தனை நூல்களைப் படைத்துள்ளார்? (CCS2T-2018)
அ) 40 ஆ) 72
இ) 43 ஈ) 52

பாவாணர், சொற்பிறப்பியல் அகரமுதலித்திட்ட இயக்குநராக 08.05.1974 அன்று பணியமர்த்தப்பட்டு, அரசின் உதவியோடு சொற்பிறப்பியல் அகரமுதலி தொகுதிகள் சிலவற்றை வெளிக்கொணர்ந்தார்; இருநூற்றுக்கும் மேற்பட்ட ஆய்வுக் கட்டுரைகள் எழுதியுள்ளார்.

TNPSC Old Questions
பொதுத்தமிழ்

பாவாணர், சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்குநராக பணியமர்த்தப்பட்ட ஆண்டு (GR2AT-17)
அ) 08.05.1974 ஆ) 05.01.1981
இ) 07.02.1902 ஈ) 12.04.1976

தாம் பணியாற்றிய கல்வி நிறுவனமொன்றில் தொடர்ந்து பணியாற்ற இயலாத சூழல் நேர்ந்தபோது, எனக்கு வறுமையும் உண்டு; மனைவி மக்களும்

உண்டு; அவற்றோடு மானமும் உண்டு என்று வெளியேறிய தன்மானமிக்க பாவாணரின் உறுதியுரை நம்மை வியக்க வைக்கிறதே! அவர், வறுமையில் வாடினாலும் பணம் கைக்குக் கிடைத்தால் நூல்களே வாங்குவார்; புலமைச் செருக்கில்லாமல் மிகவும் எளிமையான வாழ்வு வாழ்ந்தவர்; அன்பு கசியும் நெஞ்சத்தில் ஆழமான நன்றியுணர்வுமிக்கவர்.

TNPSC Old Questions
பொதுத்தமிழ்

"எனக்கு வறுமையும் உண்டு; மனைவி மக்களும் உண்டு; அவற்றோடு மானமும் உண்டு" - என்று கூறிய தமிழறிஞர் (CCSE4GT/2024)

அ) மறைமலையடிகள்
ஆ) தேவநேயப்பாவாணர்
இ) ம.பொ.சிவஞானம்
ஈ) பரிதிமாற்கலைஞர்
உ) விடை தெரியவில்லை

எனக்கு வறுமையும் உண்டு; மனைவி மக்களும் உண்டு; அவற்றோடு மானமும் உண்டு - எனக் கூறியவர் (GRFT3 - 2016)

அ) பாவாணர் ஆ) காந்தி
இ) தெ.பொ.மீ ஈ) அயோத்திதாசப் பண்டிதர்

தேவநேயப்பாவாணர் பெயரில் சென்னை அண்ணாசாலையில் மாவட்ட மைய நூலகம் செயல்பட்டு வருகிறது. இவர் படித்துப் பணியாற்றிய இராசபாளையத்திற்கு அருகிலுள்ள முறம்பு என்னும் இடத்தில் **பாவாணர் கோட்டம், அவர்தம் முழு உருவச்சிலை, அவர் பெயரில் நூலகம்** ஆகியவை அமைக்கப்பட்டுள்ளன. அவை, பாவாணரின் புகழ்பேசும் மையங்களாகத் திகழ்கின்றன.

மதுரையில் 05.01.1981 அன்று நடைபெற்ற உலகத்தமிழ் மாநாட்டின்போது, மாந்தன் தோற்றமும் தமிழர் மரபும் என்னும் தலைப்பில் சொற்பொழிவாற்றித் தமிழன்னைக்குப் பெருமை சேர்த்தார். அஃது அவரின் நிறைவுப் பணியாகவும், நம் மனத்தில் நீங்கா நினைவாகவும் என்றும் நிலைத்திருக்கும்.

TNPSC Old Questions
பொதுத்தமிழ்

"மாந்தன் தோற்றமும் தமிழர் மரபும்" என்னும் தலைப்பில் உலகத்தமிழ் மாநாட்டில் சொற்பொழிவாற்றியவர் (CCSE2T/2024)

அ) பாவலரேறு பெருஞ்சித்திரனார்
ஆ) பரிதிமாற் கலைஞர்
இ) தேவநேயப் பாவாணர்
ஈ) சோமசுந்தர பாரதியார்
உ) விடை தெரியவில்லை

1981-முதல் உலகத்தமிழ் மாநாட்டில் "மாந்தன் தோற்றமும் தமிழர் மரபும்" என்னும் தலைப்பில் சொற்பொழிவாற்றியவர் (EO3GS-2022)

அ) வையாபுரி ஆ) அ.சிதம்பரநாதன்
இ) சாலை இளந்திரையன் **ஈ) தேவநேயப்பாவாணர்**

தேவநேயப்பாவாணர் தமிழன்னைக்குப் பெருமை சேர்க்கும் வகையில் இறுதியாக சொற்பொழிவு நிகழ்த்திய இடம் எது? (EOGT-2013)

அ) சென்னை **ஆ) மதுரை**
இ) கோவை ஈ) தஞ்சை

***

மொழிஞாயிறு தேவநேயப்பாவாணர் தனித்தமிழ் ஊற்று; செந்தமிழ் ஞாயிறு; இலக்கியப் பெட்டகம்; இலக்கணச் செம்மல்; தமிழ்மானங் காத்தவர்; தமிழ், தமிழர் நலம் காப்பதனையே உயிர்மூச்சாகக் கொண்டவர். உலக முதன்மொழி தமிழ்; இந்திய மொழிகளுக்கு மூலமும் வேரும் தமிழ்; திராவிட மொழிகளுக்குத் தாய்மொழி தமிழ் என வாழ்நாள் முழுவதும் ஆய்வுசெய்து நிறுவிய செம்மல் தேவநேயப்பாவாணர்.

***

"தொன்மைமிக்க உலக மொழிகள் அனைத்திலும் தமிழே தொன்மை, முன்மை, எளிமை, ஒளிமை, இளமை, வளமை, தாய்மை, தூய்மை, செம்மை, மும்மை, இனிமை, தனிமை, பெருமை, திருமை, இயன்மை, வியன்மை என்னும் பல்வகைச் சிறப்புகள் அனைத்தையும் ஒருங்கே பெற்றிருக்கிறது."

- **தேவநேயப்பாவாணர்.**

அகரமுதலி

பழசு

அகரமுதலி

எட்டாம் வகுப்பு - உரைநடை

அகரம், ஆதி என்னும் இருசொற்களின் சேர்க்கையே அகராதி என்றானது. ஆதி என்பதற்கு முதல் என்பது உட்படப் பல பொருள்கள் உண்டு. ஒரு மொழியிலுள்ள எல்லாச் சொற்களையும் அகரவரிசையில் அமையும்படி ஒருசேரத் தொகுத்து விளக்கும் நூலை அகராதி என்பர். அகராதி என்னும் சொல் தற்போதைய வழக்கில் அகரமுதலி என வழங்கப்படுகிறது.

நிகண்டுகள்

தமிழ் அகரமுதலி வரலாற்றில், செம்பாதி இடத்தைப்பெறும் சொற்பொருள் துறை நூல்கள் நிகண்டுகளாம். **நிகண்டுகளில் பழைமையானது சேந்தன் திவாகரம்.** இதன் ஆசிரியர் திவாகரர். இந்நிகண்டினைத் தொடர்ந்து இருபத்தைந்து நிகண்டுகள் தோன்றியுள்ளன. இவற்றில் சிறப்பானது **மண்டலபுருடர் இயற்றிய சூடாமணி நிகண்டு.**

TNPSC Old Questions
பொதுத்தமிழ்

சூடாமணி நிகண்டு ஆசிரியர் (VGT19-2016)
அ) திவாகரமுனிவர் ஆ) பிங்கலம்
இ) வீரமண்டல புருடர் ஈ) காங்கேயர்

கோடிட்ட இடத்தை நிரப்புக (GROUP 4 - 2013)
நிகண்டுகளில் மிகப் பழமையானது ______
அ) சேந்தன் திவாகரம்
ஆ) சூடாமணி நிகண்டு
இ) அகராதி
ஈ) இதில் எதுவும் இல்லை

அகரமுதலி

திருமூலரின் திருமந்திரத்தில் அகராதி என்னும் சொல் முதன்முதலாக இடம்பெற்றுள்ளது. நிகண்டுகளுள் ஒன்றான 'அகராதி நிகண்டில்' இச்சொல் அடைமொழியாக அமைந்துள்ளது. இந்நூலே அகரமுதலிகள் தோன்றுவதற்கு ஒரு திருப்புமுனையாக அமைந்தது எனலாம். இந்நூலில் சொற்களின் முதலெழுத்துகள் மட்டுமே அகரவரிசையில் அமைந்திருக்கின்றன.

TNPSC Old Questions
பொதுத்தமிழ்

விடையைத் தேர்க : (GTBA-14)
'அகராதி' என்னும் சொல் முதன்முதலாக இடம் பெற்றுள்ள நூல் எது?
அ) சதுரகராதி ஆ) திருமந்திரம்
இ) திருவருட்பா ஈ) திருக்குறள்

உரிய விடையைத் தேர்க :
அகராதி என்னும் சொல் முதன்முதலாக இடம் பெற்றுள்ள நூல் (EOGT-2013)
அ) திருமந்திரம் ஆ) சதுரகராதி
இ) தமிழ் அகராதி ஈ) தமிழ்-தமிழ் அகர முதலி

உரிய விடையைத் தேர்க : (GROUP 4 - 2013)
அகராதி என்னும் சொல்லை முதன் முதலாக கையாண்டவர் யார்?
அ) திருமூலர் ஆ) வீரமாமுனிவர்
இ) திருநாவுக்கரசர் ஈ) கம்பர்

சதுரகராதி

வீரமாமுனிவர் தொகுத்த சதுரகராதியே தமிழில் தோன்றிய முதல் அகரமுதலி. இது கி.பி.1732 ஆம் ஆண்டு வெளிவந்தது. சதுர் என்பதற்கு நான்கு எனபது பொருள். இந்நூலில் பெயர், பொருள், தொகை, தொடை என நான்குவகைகளில் தனித்தனியாகப் பொருள் விளக்கம் அளிக்கப்பட்டுள்ளது. வீரமாமுனிவர் தமிழ்-இலத்தீன் அகராதி, இலத்தீன்-தமிழ் அகராதி, தமிழ்-பிரெஞ்சு அகராதி, பிரெஞ்சு-தமிழ் அகராதி, போர்த்துகீசிய இலத்தீன் தமிழ் அகராதி ஆகிய அகரமுதலிகளை உருவாக்கினார்.

TNPSC Old Questions
பொதுத்தமிழ்

தமிழின் முதல் அகராதியான சதுரகராதியை இயற்றியவர் (EO3GS-2022)
அ) ஜி.யு.போப் ஆ) கால்டுவெல்
இ) எட்கார் ஆலன்போ ஈ) வீரமாமுனிவர்
உ) விடை தெரியவில்லை

அகராதி முறையைத் தமிழுக்குத் தந்தவர் (HC2GST16)
அ) எல்லீஸ் ஆ) போப்
இ) ரேனியஸ் ஈ) வீரமாமுனிவர்

பிற அகரமுதலிகள்

தமிழ்-தமிழ் அகராதி ஒன்று லெவி-ஸ்பால்டிங் என்பவரால் வெளியிடப்பட்டது. யாழ்ப்பாணம் கதிரைவேலனாரால் தமிழ்ச்சொல்லகராதி வெளியிடப்பட்டது. இது சங்க அகராதி எனவும் அழைக்கப்பட்டது. இதில் சொல்லின் மூலம் தருதல், மேற்கோள் அமைத்தல் எனும் மரபு பின்பற்றப்பட்டுள்ளது. தமிழ்ப் பேரகராதி ஒன்றைக் குப்புசாமி தொகுத்து வெளியிட்டார். இராமநாதன் என்பார் படங்களுடன் கூடிய ஓர் அகரமுதலியை வெளியிட்டார். இந்நூல் இருபதாம் நூற்றாண்டுத் தமிழ் அகராதி எனும் பெயருடன் வெளிவந்தது. வின்சுலோ என்பவர் தமிழ்-ஆங்கிலப் பேரகராதியைத் தொகுத்து வெளியிட்டார்.

1925 ஆம் ஆண்டு பவானந்தத்தின் தற்காலத் தமிழ்ச்சொல்லகராதியும், 1937 ஆம் ஆண்டு மதுரைத் தமிழ்ப் பேரகராதியும் வெளிவந்தன. மு.சண்முகம் என்பவரால் தொகுக்கப்பட்ட தமிழ்-தமிழ் அகரமுதலி 1985 ஆம் ஆண்டு தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனத்தால் வெளியிடப்பட்டது.

இருபதாம் நூற்றாண்டில் வெளிவந்த மிகப்பெரிய அகரமுதலி சென்னைப் பல்கலைக்கழக அகராதி. இது நன்கு திட்டமிட்டு முழுமையாக உருவாக்கப்பட்டது. இவ்வகரமுதலி தமிழ் லெக்சிகன் என்னும் பெயரில் ஆறு தொகுதிகளாக வெளியிடப்பட்டுள்ளது.

செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலி

1985 ஆம் ஆண்டு தேவநேயப்பாவாணரின் செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் பேரகரமுதலியின் முதல் தொகுதி வெளிவந்தது. இரண்டாம்தொகுதி 1993 ஆம் ஆண்டு வெளியானது. ஒவ்வொரு சொல்லின் சொற்பிறப்பும், இனமொழிச் சொற்களுக்கான குறிப்பும், பதிப்பின் இறுதியில் தரப்பட்டுள்ளன. படங்களைத் தந்த இரண்டாவது அகரமுதலி இதுவேயாகும்.

இன்றைய கல்விப்பரப்பிலும் அகரமுதலி உருவாக்கத்திலும் கணினியும் பயன்பட்டு வருகிறது. முழுமையாகக் கணினி உதவியுடன் உருவாக்கப்பட்டு வெளிவந்த முதல் தமிழ் அகரமுதலி கிரியாவின் தற்காலத் தமிழ் அகராதி. விளக்கச் சொற்பொருளோடு

வந்த முதல் அகரமுதலி இதுவே. தற்போது பல்வேறு பதிப்பகங்கள் அகரமுதலிகளை வெளியிட்டு வருகின்றன.

கலைக்களஞ்சியம்

சொற்களுக்குரிய பொருளை அகரமுதலிமூலம் அறிந்துகொண்டபின், இலக்கியங்களில் சொல்லப்பட்டுள்ள பெயர்கள், கதைகள், வரலாறுகள், பழக்கவழக்கங்கள் முதலியவற்றைத் தெரிந்துகொள்ள வேண்டிய தேவைகள் ஏற்பட்டன. இச்சிந்தனையின் விளைவாகத் தோன்றியவையே கலைக்களஞ்சியங்கள்.

அபிதான கோசம் தமிழ்க் கலைக்களஞ்சியங்களின் முன்னோடி ஆகும். இது இலக்கியப் புராண இதிகாசச் செய்திகளைக்கொண்டு இலக்கியக் களஞ்சியமாகத் திகழ்கின்றது. இது 1902 ஆம் ஆண்டு வெளியானது.

அபிதான சிந்தாமணி இலக்கியச் செய்திகளோடு அறிவியல் துறைப் பொருள்களையும் முதன்முதலாகச் சேர்த்து விளக்கம் தந்து 1934 ஆம் ஆண்டு வெளியிடப்பட்டது. இதனைச் சிங்காரவேலனார் தொகுத்து வெளியிட்டார்.

தமிழ்வளர்ச்சிக்கழகம் முறையான முதல் கலைக்களஞ்சியத்தைத் தொகுத்து வெளியிட்டுள்ளது. இது பத்துத் தொகுதிகளாக வெளிவந்துள்ளது. இக்கழகம் குழந்தைகள் கலைக்களஞ்சியம், நாடகக் கலைக்களஞ்சியம், இசுலாமிய கலைக்களஞ்சியம் முதலிய பல கலைக்களஞ்சியங்களையும் வெளியிட்டுள்ளது.

கலைச்சொல் அகரமுதலி

கலைக்களஞ்சியங்களைத் தொடர்ந்து துறைசார்ந்த புதிய சொற்களுக்கு விளக்கம் தர, கலைச்சொல் அகரமுதலி தோன்றியது. கலைக்கதிர் நிறுவன முயற்சியால் பொதுஅறிவு, உளவியல், புவியியல், புள்ளியியல், வரலாறு, வானவியல் முதலிய துறைகளுக்கும் கலைச்சொல் அகரமுதலிகள் 1960 ஆம் ஆண்டு தொகுக்கப்பட்டன. மணவை முஸ்தபா அறிவியல்சார்ந்த துறைவாரியான கலைச்சொல் அகரமுதலிகளைத் தொகுத்து வெளியிட்டுள்ளார்.

அறிவியல் கலைச்சொல் களஞ்சியம் 1991 ஆம் ஆண்டு வெளியிடப்பட்டது. இதில் தமிழ்க் கலைச்சொல்லுடன் விளக்கச் சொற்பொருள்களும் தரப்பட்டுள்ளன. இது தமிழ் அகரமுதலியின் வளர்ச்சியைக் காட்டுவதாய் அமைந்துள்ளது.

பலதுறைகளில் பயன்படுத்தப்படும் பொழுது மொழி வளர்ச்சி அடைகிறது. மொழியின் வளர்ச்சி நம் வாழ்வின் வளர்ச்சியாகும். அவ்வகையில் காலந்தோறும் ஏற்படும் சொற்பொருள் மாற்றங்களை அகரமுதலிகள் பதிவுசெய்து சீர்மைப்படுத்தி மொழி வளர்ச்சிக்கு உதவுகின்றன.

இன்றைய மக்களும் பண்டைய இலக்கிய இலக்கணங்களின் சொல்வளம், பொருளாழம் போன்றனவற்றைத் தெள்ளிதின் அறிந்து சுவைத்து மகிழத் துணை செய்வன அகரமுதலிகளே.

அகர முதலி ஒன்றை
நாளும் படித்து வருவாய்

நிகரிலாத சொற்கள்
நினைவில் நன்கு பெறுவாய் - பாரதிதாசன்

பாவலரேறு பெருஞ்சித்திரனார்

புதுசு

அன்னை மொழியே

பத்தாம் வகுப்பு - செய்யுள்

- தென்மொழி, தமிழ்ச்சிட்டு இதழ்களின் வாயிலாகத் தமிழுணர்வை உலகெங்கும் பரப்பியவர் துரை.மாணிக்கம் என்ற இயற்பெயர் கொண்ட பெருஞ்சித்திரனார்.
- இவர் உலகியல் நூறு, பாவியக்கொத்து, நூறாசிரியம், கனிச்சாறு, எண்சுவை எண்பது, மகபுகுவஞ்சி, பள்ளிப் பறவைகள் முதலிய நூல்களைப் படைத்துள்ளார்.
- இவரின் திருக்குறள் மெய்ப்பொருளுரை, தமிழுக்குக் கருவூலமாய் அமைந்துள்ளது.
- இவரது நூல்கள் நாட்டுடைமையாக்கப்பட்டுள்ளன.

TNPSC Old Questions
பொதுத்தமிழ்

துரை மாணிக்கம் - என்பது இவரது இயற்பெயராகும் (CCS2T-2022)

அ) சுரதா
ஆ) பாவலரேறு பெருஞ்சித்திரனார்
இ) முடியரசன்
ஈ) பாரதிதாசன்
உ) விடை தெரியவில்லை

அன்னை மொழியே
- பாவலரேறு பெருஞ்சித்திரனார்

சின்னக் குழந்தையின் சிரிப்பும் ஆனவள்; பழுத்த நரையின் பட்டறிவும் ஆனவள்; வானத்திற்கும் வையத்திற்கும் இடைப்பட்ட யாவற்றையும் கவிதையாகக் கொண்டவள்; உணர்ந்து கற்றால் கல்போன்ற மனத்தையும் கற்கண்டாக்குபவள்; அறிவைப் பெருக்குபவள்; அன்பை வயப்படுத்துபவள்; செப்புதற்கரிய அவள் பெருமையைப் போற்றுவோம்.

பாவலரேறு பெருஞ்சித்திரனாரின் கனிச்சாறு (தொகுதி 1) தொகுப்பிலிருந்து இருவேறு தலைப்பில் உள்ள பாடல்கள் (தமிழ்த்தாய் வாழ்த்து, முந்துற்றோம் யாண்டும்) எடுத்தாளப்பட்டுள்ளன.

அழகார்ந்த செந்தமிழே!

அன்னை மொழியே! அழகார்ந்த செந்தமிழே!
முன்னைக்கும் முன்னை முகிழ்த்த நறுங்கனியே!
கன்னிக் குமரிக் கடல்கொண்ட நாட்டிடையில்
மன்னி அரசிருந்த மண்ணுலகப் பேரரசே!

தென்னன் மகளே! திருக்குறளின் மாண்புகழே!

இன்னறும் பாப்பத்தே! எண்தொகையே! நற்கணக்கே!
மன்னுஞ் சிலம்பே! மணிமே கலைவடிவே!
முன்னும் நினைவால் முடிதாழ வாழ்த்துவமே!

செப்பரிய நின்பெருமை

செந்தமிழே! உள்ளுயிரே செப்பரிய நின்பெருமை
எந்தமிழ்நா எவ்வாறு எடுத்தே உரைவிரிக்கும்?
முந்தைத் தனிப்புகழும் முகிழ்த்த இலக்கியமும்
விந்தை நெடுநிலைப்பும் வேறார் புகழுரையும்

உந்தி உணர்வெழுப்ப உள்ளக் கனல்மூளச்
செந்தா மரைத்தேனைக் குடித்துச் சிறகார்ந்த
அந்தும்பி பாடும் அதுபோல யாம்பாடி
முந்துற்றோம் யாண்டும் முழங்கத் தனித்தமிழே!

- கனிச்சாறு

பாடலின் பொருள்

அன்னை மொழியே! அழகு நிறைந்த செழுந்தமிழே! பழமைக்கும் பழமையாய்த் தோன்றிய நறுங்கனியே! கடல் கொண்ட குமரிக் கண்டத்தில் நிலைத்து அரசாண்ட மண்ணுலகப் பேரரசே! பாண்டிய மன்னனின் மகளே! திருக்குறளின் பெரும் பெருமைக்குரியவளே! பத்துப்பாட்டே! எட்டுத்தொகையே! பதினெண் கீழ்க்கணக்கே! நிலைத்த சிலப்பதிகாரமே! அழகான மணிமேகலையே! பொங்கியெழும் நினைவுகளால் தலைபணிந்து வாழ்த்துகின்றோம்.

செழுமை மிக்க தமிழே! எமக்குயிரே! சொல்லுதற்கரிய நின் பெருமைதனை என்னுடைய தமிழ் நாக்கு எவ்வாறுதான் விரித்துரைக்கும்? பழம்பெருமையும் தனக்கெனத் தனிச் சிறப்பும் இலக்கிய வளமும் கொண்ட தமிழே! வியக்கத்தக்க உன்னுடைய நீண்ட நிலைத்த தன்மையும் வேற்று மொழியினர் உன்னைப் பற்றி உரைத்த புகழுரையும் எமக்குள் பற்றுணர்வை எழுப்புகின்றன. எம் தனித்தமிழே! வண்டானது செந்தாமரைத் தேனைக் குடித்துச் சிறகசைத்துப் பாடுவது போன்று நாங்கள் உன்னைச் சுவைத்து உள்ளத்தில் கனல் மூள, உன் பெருமையை எங்கும் முழங்குகின்றோம்.

சாகும்போதும் தமிழ்படித்துச் சாக வேண்டும் - என்றன்
சாம்பலும் தமிழ்மணந்து வேகவேண்டும்
- க.சச்சிதானந்தன்

புதுசு

தமிழ்க்கும்மி

ஆறாம் வகுப்பு - செய்யுள்

- பெருஞ்சித்திரனாரின் இயற்பெயர் மாணிக்கம்.
- பாவலரேறு என்னும் சிறப்புப் பெயரால் அழைக்கப்படுகிறார்.
- கனிச்சாறு, கொய்யாக்கனி, உலகியல் நூறு, பாவியக்கொத்து, நூறாசிரியம் முதலான நூல்களை இயற்றியுள்ளார்.
- தென்மொழி, தமிழ்ச்சிட்டு, தமிழ்நிலம் ஆகிய இதழ்களை நடத்தினார்.
- தனித்தமிழையும் தமிழுணர்வையும் பரப்பிய பாவலர் இவர்.

TNPSC Old Questions
பொதுத்தமிழ்

துரைமாணிக்கம் என்ற இயற்பெயரைக் கொண்டவர் (GT112-2013)

அ) மீரா
ஆ) முடியரசன்
இ) கண்ணதாசன்
ஈ) பெருஞ்சித்திரனார்

கனிச்சாறு

- இந்நூல் எட்டுத் தொகுதிகளாக வெளிவந்துள்ளது.
- இது தமிழுணர்வு நிறைந்த பாடல்களைக் கொண்டது.

தமிழ்க்கும்மி
- பெருஞ்சித்திரனார்

கூட்டமாகக்கூடிக் கும்மியடித்துப் பாடி ஆடுவது மகிழ்ச்சியான அனுபவம். கும்மியில் தமிழைப் போற்றிப்பாடி ஆடுவது பெரும் மகிழ்ச்சி தருவதாகும். வாருங்கள்! தமிழின் பெருமையை வாயாரப் பேசலாம்; காதாரக் கேட்கலாம்; இசையோடு பாடலாம்; கும்மி கொட்டி ஆடலாம்.

கொட்டுங்கடி கும்மி கொட்டுங்கடி இளங்
கோதையரே கும்மி கொட்டுங்கடி - நிலம்
எட்டுத் திசையிலும் செந்தமிழின் புகழ்
எட்டிடவே கும்மி கொட்டுங்கடி!

ஊழி பலநூறு கண்டதுவாம் அறிவு
ஊற்றெனும் நூல்பல கொண்டதுவாம் - பெரும்
ஆழிப் பெருக்கிற்கும் காலத்திற்கும் முற்றும்
அழியாமலே நிலை நின்றதுவாம்!

பொய் அகற்றும் உள்ளப் பூட்டறுக்கும் - அன்பு
பூண்டவரின் இன்பப் பாட்டிருக்கும் - உயிர்
மெய்புகட்டும் அறமேன்மை கிட்டும் இந்த
மேதினி வாழ்வழி காட்டிருக்கும்!
- பெருஞ்சித்திரனார்

(இப்பாடல் கனிச்சாறு என்னும் நூலில் இடம் பெற்றுள்ளது.)

பாடலின் பொருள் :

இளம்பெண்களே! தமிழின் புகழ் எட்டுத்திசைகளிலும் பரவிடும் வகையில் கைகளைக் கொட்டிக் கும்மியடிப்போம்.

பல நூறு ஆண்டுகளைக் கண்டது தமிழ்மொழி. அறிவு ஊற்றாகிய நூல்கள் பலவற்றைக் கொண்ட மொழி. பெரும் கடல் சீற்றங்கள், கால மாற்றங்கள் ஆகிய எவற்றாலும் அழியாமல் நிலைத்திருக்கும் மொழி.

தமிழ், பொய்யை அகற்றும் மொழி; அது மனத்தின் அறியாமையை நீக்கும் மொழி; அன்புடைய பலரின் இன்பம் தரும் பாடல்கள் நிறைந்த மொழி; உயிர் போன்ற

உண்மையை ஊட்டும் மொழி, உயர்ந்த அறத்தைத் தரும் மொழி. இந்த உலகம் சிறந்து வாழ்வதற்கான வழிகளையும் காட்டும் மொழி தமிழ்மொழி.

பழகு

ஓய்வும் பயனும்!

ஒன்பதாம் வகுப்பு - செய்யுள்

பாவலரேறு பெருஞ்சித்திரனார்

- பாவலரேறு பெருஞ்சித்திரனாரின் இயற்பெயர் **துரை.மாணிக்கம்.**
- இவரது ஊர் **சேலம்** மாவட்டத்திலுள்ள **சமுத்திரம்.**
- இவர்தம் பெற்றோர் **துரைசாமி, குஞ்சம்மாள்** ஆவர்.
- 10.03.1933 அன்று பிறந்த இவர், 11.06.1995 ஆம் நாள் மறைந்தார்.
- கனிச்சாறு, ஐயை, கொய்யாக்கனி, பாவியக்கொத்து, பள்ளிப்பறவைகள், நூறாசிரியம் முதலிய பல நூல்களை இயற்றியுள்ளார்.
- **தென்மொழி, தமிழ்ச்சிட்டு, தமிழ்நிலம்** ஆகிய இதழ்கள்மூலம் உலகத் தமிழரிடையே தமிழுணர்வை உருவாக்க இவர் பாடுபட்டார்.

TNPSC Old Questions
பொதுத்தமிழ்

தென்மொழி, தமிழ்ச்சிட்டு, தமிழ்நிலம் ஆகிய இதழ்கள் மூலம் உலகத் தமிழரிடையே தமிழுணர்வை உருவாக்கப் பாடுபட்டவர் யார்? (GR5AT-2017)

அ) பாவலரேறு பெருஞ்சித்திரனார்
ஆ) ஆலந்தூர் மோகனரங்கன்
இ) ஈரோடு தமிழன்பன்
ஈ) அப்துல் ரகுமான்

உலகத் தமிழரிடையே தமிழுணர்வை உருவாக்கிய பெருஞ்சித்திரனாரின் இதழ்கள் யாவை? (CCS2T-2022)

அ) பாவியக்கொத்து, ஐயை, கொய்யாக்கனி
ஆ) மணிமொழி மாலை, பறவைகளுக்கு, குஞ்சுகளுக்கு
இ) தென்மொழி, தமிழ்ச்சிட்டு, தமிழ் நிலம்
ஈ) தமிழ் நிலம், ஐயை, கனிச்சாறு
உ) விடை தெரியவில்லை

பாவலரேறு பெருஞ்சித்திரனார் பிறந்த மாவட்டம் எது? (AJGST 2019)

அ) சேலம் ஆ) தருமபுரி
இ) கிருஷ்ணகிரி ஈ) நாமக்கல்
உ) விடை தெரியவில்லை

'பாவலரேறு' பெருஞ்சித்திரனாரின் இயற்பெயர் யாது? (AJGST-2016)

அ) அப்துல் ரகுமான் ஆ) வாணிதாசன்
இ) முடியரசன் **ஈ) துரை. மாணிக்கம்**

உலகத் தமிழரிடையே தமிழுணர்வை உருவாக்க பெருஞ்சித்திரனார் வெளியிட்ட இதழ்களுள் ஒன்று (EOGT-2013)

அ) தென்றல் **ஆ) தென்மொழி**
இ) குயில் ஈ) மணிக்கொடி

உலகத் தமிழரிடையே தமிழுணர்வை உருவாக்கப் பாடுபட்ட பெருஞ்சித்திரனாரின் இதழ் பெயரைத் தேர்ந்தெடு. (GT112-2013)

அ) இந்தியா ஆ) குயில்
இ) தமிழ்ச்சிட்டு ஈ) மணிக்கொடி

பள்ளிப்பறவைகள்

- இந்நூலிலுள்ள பாடல்கள் பலவும் தென்மொழி, தமிழ்ச்சிட்டு ஆகிய இதழ்களில் வெளிவந்தவை.
- இந்நூல் குஞ்சுகளுக்கு, பறவைகளுக்கு, மணிமொழிமாலை என முப்பிரிவாக அமைந்துள்ளது.

பள்ளிப்பறவைகள்
ஓய்வும் பயனும்!

ஓய்வாக இருக்கையில் தம்பி - நீ
ஓவியம் வரைந்து பழகு!
தூய்மையோ டமைதி சேரும்! - நன்கு
தோன்றிடும் உள்ள அழகு!

பாக்களும் இயற்றிப் பழகு - நல்ல
பாடலைப் பாடி மகிழ்வாய்!
தாக்குறும் துன்பம் யாவும் - இசைத்
தமிழினில் மாய்ந்து போகும்!

அறிவியல் ஆய்வு செய்வாய் - நீ
அன்றாடச் செய்தி படிப்பாய்!
செறிவுறும் உன்றன் அறிவு - உளச்
செழுமையும் வலிவும் பெறுவாய்!

மருத்துவ நூல்கள் கற்பாய் - உடன்
மனநூலும் தேர்ந்து கற்பாய்!
திருத்தமெய்ந் நூல்கள் அறிவாய் - வருந்
தீமையும் பொய்யும் களைவாய்!

- பெருஞ்சித்திரனார்.

இப்பாடல், பள்ளிப்பறவைகள் என்னும் குழந்தைப்பாடல் தொகுப்பின் இரண்டாம் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

பொருள் :

மாணவர்களே! ஓய்வாக இருக்கும் நேரத்தில் ஓவியம் வரையக் கற்றுக்கொண்டால் தூய எண்ணங்களும் அமைதியும் சேர்ந்து உள்ளத்தின் அழகு வெளிப்பட, அது காரணமாக அமையும்.

தமிழில் பாடல்கள் எழுதவும் பாடவும் பழகிக்கொள்ளுங்கள்; இசைத்தமிழின் இனிமையால் வாழ்வின் துன்பங்கள் தொலைந்துபோகும்.

அறிவியல் ஆய்வுகளை மேற்கொள்ளுங்கள், அன்றாட நிகழ்வுகளைச் செய்தித்தாள் வாயிலாக அறிந்துகொள்ளுங்கள்; உலகநிகழ்வுகளை அறிவதன்மூலம் அறிவுத்திறன் மேம்படும்; உள்ளம் வளமும் வலிமையும் பெற்றுச் சிறக்கும்; மருத்துவ

நூல்களையும் மனநல நூல்களையும் படித்துத் தெரிந்துகொள்ளுங்கள்; அவை உடலையும், உள்ளத்தையும் பாதுகாக்கத் துணைபுரியும்.

நீங்கள் வாழ்க்கைக்கு உதவும் தத்துவ நூல்களைக் கற்றால், அதன்வழித் தீமையையும் பொய்ம்மையையும் விடுத்து நல்வாழ்வு வாழலாம். எனவே, ஏட்டுக்கல்வியுடன் கலையறிவும் தொழிற்கல்வியும் அறிவியற் சிந்தனையும் இருந்தால், நீங்கள் வாழ்வில் வெற்றிபெறலாம்; ஆதலால், ஓய்வுநேரத்தைப் பயனுள்ள வகையில் செலவிட்டு வாழ்வில் வளம்பெறுங்கள்.

பழசு

பெருஞ்சித்திரனார்

ஏழாம் வகுப்பு

தமிழ் படித்தால்......
அறம் பெருகும் தமிழ்படித்தால், அகத்தில் ஒளிபெருகும்
திறம் பெருகும் உரம் பெருகும், தீமைக் கெதிர் நிற்கும்
மறம் பெருகும் ஆண்மை வரும் மருள்விலகிப் போகும்
புறம் பெயரும் பொய்மை யெலாம், புதுமை பெறும் வாழ்வே!

- பெருஞ்சித்திரனார்.

TNPSC Old Questions
பொதுத்தமிழ்

உரிய விடையைத் தேர்க : (GROUP 4 - 2013)
தமிழ் படித்தால் எது பெருகும்?
அ) புதுமை ஆ) திறம்
இ) அறம் ஈ) புறம்

பழசு

ஜி.யு.போப்

எட்டாம் வகுப்பு - துணைப்பாடம்

தமிழன்னைக்குத் தொண்டாற்றிய சான்றோரில் தமிழைத் தாய்மொழியாகக் கொள்ளாத சான்றோர்களும் குறிக்கத்தக்க இடம்பெற்றுள்ளனர். ஐரோப்பியர் வருகையைத் தொடர்ந்து, தமிழகத்தில் குடிபெயர்ந்து சமயப்பணியோடு தமிழ்ப்பணியையும் தங்கள் தலைமைப் பணியாய்க்கொண்டு தொண்டாற்றிய பெருமக்கள் பலர். அவருள் தமிழ்மொழியால் ஈர்க்கப்பட்டுத் தமிழாய் மலர்ந்து, மணம் பரப்பி, என்றும் தமிழுலகில் அழியாப்புகழ் பெற்றுள்ள சான்றோர் தவத்திரு ஜி.யு.போப் ஆவார்.

பிறப்பும் இளமையும்

ஜி.யு.போப் என்றழைக்கப்படும் ஜியார்ஜ் யுக்ளோ போப், கி.பி.1820 ஆம் ஆண்டு ஏப்பிரல் 24 ஆம் நாள் பிரான்சு நாட்டின் எட்வர்டு தீவில் ஜான் போப்புக்கும், கெதரின் யுளாபுக்கும் மகனாகப் பிறந்தார். போப்பின் பெற்றோர் சிறந்த கல்வியாளர்களாகவும் சமயப்பற்றுமிக்கவர்களாகவும் விளங்கினர். தம் குழந்தைகளுக்குக் கல்வியையும் சமயத்தையும் கற்பித்ததுடன் நல்ல ஒழுக்கத்தையும் ஊட்டி வளர்த்தனர். ஜி.யு.போப்பும் இளமையிலேயே சுறுசுறுப்பு, விடாமுயற்சி, ஊக்கம், உழைப்பு முதலியவற்றில் எல்லாம் மேம்பட்டுத் திகழ்ந்தார்.

TNPSC Old Questions
பொதுத்தமிழ்

ஜி.யு.போப் கி.பி.1820 ஆம் ஆண்டு ________ ஆம் நாள் பிறந்தார். (EO4GT-2019)
அ) ஏப்ரல் 24 ஆ) நவம்பர் 17
இ) பிப்ரவரி 18 ஈ) ஆகஸ்ட் 23

தொண்டுள்ளம்

போப்பின் தமையனார் ஹென்றி என்பவர், தமிழகத்தில் கிறித்தவச் சமயத்தைப் பரப்பும் சமய குருவாகப் பணியாற்றி வந்தார். அவரைப்போன்று தாமும் சமயப்பணி ஆற்ற வேண்டும் என்று போப் விரும்பினார்.

போப், தம்முடைய பத்தொன்பதாம் அகவையில் தமிழகத்தில் சமயப் பணியாற்றத் தேர்ந்தெடுக்கப்பட்டார். அவர் பாய்மரக் கப்பலில் சென்னை வந்துசேர எட்டுத்திங்களாயின. அந்த எட்டுத்திங்களையும் வீணே கழிக்காமல், தமிழ் நூல்களையும் வடமொழி நூல்களையும் படித்தார். தமிழகம் வந்ததும் தமிழர் முன்னிலையில் சொற்பொழிவு ஆற்றும் அளவுக்குத் தம் திறமையை மேம்படுத்திக்கொண்டார்.

ஜி.யு.போப் பாய்மரக்கப்பலில் சென்னை வந்த எட்டுத் திங்களும் ________, ________ ஆகிய மொழி நூல்களைப் படித்தார். (JGT-19)

அ) தமிழ், ஆங்கிலம் ஆ) வடமொழி, கன்னடம்
இ) தெலுங்கு, தமிழ் ஈ) வடமொழி, தமிழ்

தமிழகத்தில் சமயப்பணி

தமிழ்நாட்டில் சென்னைச் சாந்தோம் பகுதியில் சமயப்பணி ஆற்றிய போப், பின்னர்த் திருநெல்வேலி மாவட்டத்திற்குச் சென்று சாயர்புரத்தில் தங்கிச் சமயப்பணி ஆற்றத் தொடங்கினார். அவர், அங்குப் பள்ளிகளை நிறுவினார்; கல்விப்பணியையும் சமயப் பணியையும் ஒருங்கே ஆற்றினார்; சமயக்கல்லூரியில் தமிழ் இலக்கியங்கள், ஆங்கில இலக்கியங்கள் முதலியவற்றையும் கிரேக்கம், இலத்தீன், எபிரேயம் முதலிய மொழிகளையும் கற்றுத்தர ஏற்பாடு செய்தார். கணிதம், அறிவாய்வு (தருக்கம்), மெய்யறிவு (தத்துவம்) ஆகியவற்றைக் கற்பிக்கும் கல்லூரி ஆசிரியராகவும் பணியாற்றினார்.

திருமணம்

திருநெல்வேலி மாவட்டம் சாயர்புரத்தில் 1842 முதல் 1849 ஆம் ஆண்டுவரை கல்விப்பணியும் சமயப் பணியும் ஆற்றிய போப், இங்கிலாந்துக்குச் சென்றார்; 1850 ஆம் ஆண்டில் திருமணம் செய்துகொண்டார். தம் மனைவியுடன் தமிழகம் வந்து, தஞ்சாவூரில் சமயப்பணியாற்றத் தொடங்கினார்.

தமிழ் இலக்கிய ஆர்வம்

தஞ்சையில் பணியாற்றிய எட்டாண்டுக் காலத்தில், புறநானூறு முதலான சங்க நூல்களையும் நன்னூல் முதலான இலக்கணங்களையும் பயின்றார். திருக்குறள், திருவாசகம், நாலடியார் முதலிய நூல்களைப் பலமுறை படித்து, அவற்றின் நயங்களை உணர்ந்தார். அவற்றை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து வெளியிட்டால், மேலைநாட்டவர் அறிந்து பயனுறுவர் என்னும் உயர்ந்த எண்ணத்தோடு அம்முயற்சியில் ஈடுபட்டார். இந்தியன் சஞ்சிகை, இந்தியாவின் தொல்பொருள் ஆய்வு முதலான ஏடுகளில், தமிழ்மொழி பற்றிய ஆராய்ச்சிக் கட்டுரைகளை ஆங்கிலத்தில் எழுதினார். அக்கட்டுரைகளில் புறநானூற்றுப் பாடல்களும், புறப்பொருள் வெண்பாமாலைத் திணை விளக்கங்களும், தமிழ்ப்புலவர் வரலாறும் இடம்பெற்றிருந்தன.

போப் உயர்ந்த பண்பாட்டுக்குரிய பொறுமை, சினமின்மை, நட்பு முதலானவற்றை விளக்கும் அறுநூறு செய்யுள்களை, அறநூல்களிலிருந்து ஆய்ந்தெடுத்துத் 'தமிழ்ச் செய்யுட் கலம்பகம்' என்னும் நூலாகத் தொகுத்ததோடு அந்தப் பாக்களுக்கு விளக்கமும் தந்துள்ளார்.

தமிழ்ச் செய்யுள் கலம்பகம் என்னும் நூலை தொகுத்தவர் (CCS4T-2022)

அ) வீரமாமுனிவர் ஆ) கால்டுவெல்
இ) ஜி.யு.போப் ஈ) தேவநேயப்பாவாணர்
உ) விடை தெரியவில்லை

ஜி.யு.போப் தொகுத்த நூலின் பெயர் (GRFT3 - 2016)

அ) கலம்பகம் ஆ) காவலூர்க் கலம்பகம்
இ) கதம்பமாலை ஈ) தமிழ்ச்செய்யுட் கலம்பகம்

அற நூல்களிலிருந்து ஆய்ந்தெடுத்துத் "தமிழ்ச் செய்யுட் கலம்பகம்" என்னும் நூலாகத் தொகுத்து விளக்கம் அளித்தவர் (GT714 - 2014)

அ) எச்.ஏ.கிருட்டிணனார் ஆ) வீரமாமுனிவர்
இ) ஜி.யு.போப் ஈ) கால்டுவெல்

'தமிழ் செய்யுள் கலம்பகம்' இது யார் தொகுப்பு? (GTBA-14)

அ) மறைமலையடிகள் ஆ) திரு.வி.க
இ) கா.சுப்பிரமணியம் ஈ) ஜி.யு.போப்

'தமிழ்ச் செய்யுட் கலம்பகம்' (GTPA-13 2014) எனும் தொகை நூலின் ஆசிரியர் யார்?

அ) கால்டுவெல் ஆ) வீரமாமுனிவர்
இ) ஜி.யு.போப் ஈ) சீகன் பால்கு

திருக்குறள், திருவாசகம், நாலடியார் ஆகிய நூல்களை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தவர் (JSTT3 - 2014)

அ) கால்டுவெல் ஆ) ஜி.யு.போப்
இ) ஜோசப் பெஸ்கி ஈ) நொபிலி

'தமிழ்ச் செய்யுட் கலம்பகம்' என்ற நூலைத் தொகுத்தவர் (JSTT3 - 2014)

அ) வீரமாமுனிவர் ஆ) எல்லீஸ்
இ) ஜி.யு.போப் ஈ) கால்டுவெல்

பாடலின் முன்னோடி

போப், தமிழைக் கற்கும் காலத்திலேயே நூலாசிரியராகவும் விளங்கினார். பள்ளியில் படிக்கும் குழந்தைகள் இலக்கணத்தை நன்கு அறிந்துகொள்ளும் வகையில் வினாவிடை முறையில் அமைந்த இரு இலக்கண நூல்களை அவர் எழுதினார்; பெரியவர்கள் கற்கும் வகையில் இலக்கண நூலொன்றையும் படைத்தார்.

மேலைநாட்டார் தமிழை எளிதில் கற்றுக்கொள்ளும் வகையில் தமிழ்-ஆங்கில அகராதி ஒன்றையும், ஆங்கிலம் - தமிழ் அகராதி ஒன்றையும் போப் வெளியிட்டார்; தமிழில் வரலாற்று நூல்களையும் எழுதினார்; பழைய தமிழ் இலக்கியங்களிலிருந்து சில செய்யுள்களைத் தொகுத்து நூலாக வெளியிட்டு, அதனைப் பாடநூலாக வைக்க ஏற்பாடு செய்தார். தமிழில் உரைநடை நூல் ஒன்றையும் எழுதினார். 1858 ஆம் ஆண்டில் உதகமண்டலம் சென்ற அவர், பள்ளி

ஒன்றனைத் தொடங்கி அதன் ஆசிரியராகவும் பணியாற்றினார்.

தமிழ்த்தொண்டு

தாயகத்திற்குச் சென்ற போப், 1885 முதல் 1908 ஆம் ஆண்டு வரை இருபத்து மூன்றாண்டுகளாக இங்கிலாந்துப் பல்கலைக்கழகத்தில் தமிழ், தெலுங்கு கற்பிக்கும் பேராசிரியராகப் பணிபுரிந்தார். திருக்குறளை நாற்பதாண்டுகள் படித்துச் சுவைத்த போப், அதனை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து 1886 ஆம் ஆண்டில் வெளியிட்டார். தமது எண்பதாம் அகவையில் 1900 ஆம் ஆண்டு திருவாசகத்தின் ஆங்கில மொழிபெயர்ப்பினை வெளியிட்டார். தம் இறுதிக்காலத்தில் புறப்பொருள் வெண்பாமாலை, புறநானூறு, திருவருட்பயன் முதலிய நூல்களையும் பதிப்பித்தார்.

தமிழின் பெருமையைத் தரணி முழுவதும் பரப்பிய போப், 1908 ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் பதினொன்றாம் நாள் தம் இன்னுயிரை நீத்தார். அவர், தம் கல்லறையில், **'இங்கே ஒரு தமிழ் மாணவன் உறங்கிக் கொண்டிருக்கிறான்'** என எழுதவேண்டுமென்று தமது இறுதிமுறியில் (உயில்) எழுதிவைத்தார். ஆங்கிலமொழியினை அன்னை மொழியாகக் கொண்ட போப், **தமிழ் மாணவன்** என்று தம்மை அறிவித்துக்கொண்டமை, தமிழ் மாட்சியே! தமிழின் மாண்பைத் தமிழரும் உணரச்செய்த போப் அல்லரோ இறந்தும் இறவாது வாழும்' தமிழ் மாணவர்! அவர், தமிழ் உள்ளங்களில் எல்லாம் இன்றும் வாழ்கின்றார்; என்றும் வாழ்வார்.

TNPSC Old Questions
பொதுத்தமிழ்

'தமிழ் மாணவன்' என்று தம்மை அறிவித்துக் கொண்டவர் யார்? (EO3GS-2022)
அ) ஜி.யு.போப் ஆ) வீரமாமுனிவர்
இ) குணங்குடி ஈ) பரிதிமாற்கலைஞர்
உ) விடை தெரியவில்லை

ஜி.யு.போப் அவர்கள் திருக்குறளை எத்தனை ஆண்டுகள் படித்துச் சுவைத்தார்? (AJGST 2019)
அ) முப்பதாண்டுகள் ஆ) நாற்பதாண்டுகள்
இ) ஐம்பதாண்டுகள் ஈ) அறுபதாண்டுகள்
உ) விடை தெரியவில்லை

"இங்கே ஒரு தமிழ் மாணவன் உறங்கிக் கொண்டிருக்கிறான்" என்று தன் கல்லறையில் எழுதச் சொன்னவர் யார்? (CCS4T-2019)
அ) கால்டுவெல் ஆ) ஜி.யு.போப்
இ) வீரமாமுனிவர் ஈ) ஷெல்லி

"திருக்குறளை நாற்பதாண்டுகள் படித்துச் சுவைத்த சான்றோர்" யார்? (GR5AT-2017)
அ) வீரமாமுனிவர் ஆ) குணங்குடி மஸ்தான்
இ) பாரதியார் ஈ) ஜி.யு.போப்

"இறந்தும் இறவாது வாழும் தமிழ் மாணவர்! அவர் தமிழ் உள்ளங்களில் இன்றும் வாழ்கின்றார். என்றும் வாழ்வார்" யார்? (GRFT3 - 2016)
அ) உவே. சாமிநாதர் ஆ) ஜி.யு.போப்
இ) கால்டுவெல் ஈ) வீரமாமுனிவர்

ஜி.யு.போப் திருக்குறளை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து வெளியிட்ட ஆண்டு (GRFT3 - 2016)
அ) 1786 ஆ) 1806
இ) 1856 ஈ) 1886

ஜி.யு. போப் திருவாசகத்தை எந்த மொழியில் மொழிபெயர்த்தார்? (GRFT3 - 2016)
அ) பிரெஞ்சு ஆ) கிரேக்கம்
இ) ஆங்கிலம் ஈ) ஜெர்மன்

தன் கல்லறையில் 'இங்கே ஒரு தமிழ் மாணவன் உறங்கிக் கொண்டிருக்கிறான்' என்று பொறிக்க வேண்டுமென்று விரும்பியவர் யார்? (AJGST-2016)
அ) கால்டுவெல் ஆ) வீரமாமுனிவர்
இ) ஜி. யூ. போப் ஈ) சீகன் பால்கு

உரிய விடையைத் தேர்க : (GROUP 4 - 2013)
திருக்குறளை நாற்பதாண்டுகள் படித்துச் சுவைத்த போப், அதனை ஆங்கிலத்தில் எந்த ஆண்டு மொழிபெயர்த்து வெளியிட்டார்?
அ) 1786 ஆ) 1856
இ) 1808 ஈ) 1886

உரிய விடையை எழுதுக : (SSGT-2013)
"இங்கே ஒரு தமிழ் மாணவன் உறங்கிக் கொண்டிருக்கிறான்" என தம் கல்லறையில் எழுத வேண்டுமென விரும்பிய மேனாட்டு அறிஞர்
அ) ஜி.யு.போப் ஆ) வீரமாமுனிவர்
இ) சீகன்பால்கு ஈ) டாக்டர் கால்டுவெல்

வீரமாமுனிவர்

புதுசு
தேம்பாவணி
பத்தாம் வகுப்பு - செய்யுள்

- இயற்பெயர் கான்சுடான்சு சோசப் பெசுகி
- தமிழின் முதல் அகராதியான சதுரகராதி, தொன்னூல் விளக்கம் (இலக்கண நூல்), சிற்றிலக்கியங்கள், உரைநடை நூல்கள், பரமார்த்தக் குருகதைகள், மொழிபெயர்ப்பு நூல்கள் ஆகியவற்றை இவர் படைத்துள்ளார்.
- வீரமாமுனிவர் திருச்சியை ஆண்ட சந்தாசாகிப் என்னும் மன்னரைச் சந்தித்து உரையாடுவதற்காக இரண்டே மாதங்களில் உருதுமொழியைக் கற்றுக்கொண்டார்.
- இவருடைய எளிமையையும், துறவையும் கண்டு வியந்த சந்தாசாகிப் 'இஸ்மத் சன்னியாசி' என்னும் பட்டத்தை வீரமாமுனிவருக்கு அளித்தார்.
- 'இஸ்மத் சன்னியாசி' என்ற பாரசீகச் சொல்லுக்குத் 'தூய துறவி' என்று பொருள்.

TNPSC Old Questions
பொதுத்தமிழ்

'இஸ்மத் சன்னியாசி' என்னும் பாரசீகச் சொல்லுக்குரிய பொருள் (EO4GS-2022)

அ) வன்துறவி ஆ) சமணத்துறவி
இ) தவத்துறவி ஈ) **தூயதுறவி**
உ) விடை தெரியவில்லை

தேம்பாவணி

- தேம்பா + அணி எனப் பிரித்து வாடாதமாலை என்றும், தேன் + பா + அணி எனப் பிரித்து தேன்போன்ற இனிய பாடல்களின் தொகுப்பு என்றும் இந்நூலுக்குப் பொருள் கொள்ளப்படுகின்றது.
- கிறித்துவின் வளர்ப்புத் தந்தையாகிய சூசையப்பர் என்னும் யோசேப்பினை (வளனை) பாட்டுடைத் தலைவனாகக் கொண்டு பாடப்பட்ட நூல் இது.
- இப்பெருங்காப்பியம் 3 காண்டங்களையும் 36 படலங்களையும் உள்ளடக்கி, 3615 பாடல்களைக் கொண்டுள்ளது.
- 17 ஆம் நூற்றாண்டில் படைக்கப்பட்டது தேம்பாவணி.

TNPSC Old Questions
பொதுத்தமிழ்

"தேம்பாவணி" எத்தனை காண்டங்களை உடையது (GR2AT-17)

அ) இரண்டு ஆ) **மூன்று**
இ) நான்கு ஈ) ஐந்து

இயேசுபெருமானின் வளர்ப்புத் தந்தை யார்? (SABT-2017)

அ) அந்தோணியார் ஆ) **சூசை**
இ) தாவீது ஈ) பேதுரு

'வளன்' என்ற சொல்லால் குறிக்கப்படுவன் யார்? (GROUP 4 - 2013)

அ) தாவீது ஆ) கோலியாத்து
இ) **சூசையப்பர்** ஈ) சவுல் மன்னர்

'தேம்பாவணி' நூலில் உள்ள படலங்களின் எண்ணிக்கை (GT112-2013)

அ) 39 படலங்கள் ஆ) 30 படலங்கள்
இ) 32 படலங்கள் ஈ) **36 படலங்கள்**

தேம்பாவணி
- வீரமாமுனிவர்

முன்நிகழ்வு

கிறித்துவிற்கு முன் தோன்றியவர் திருமுழுக்கு யோவான். இவரை அருளப்பன் என்றும் குறிப்பிடுவர். இவரே கிறித்துவின் வருகையை அறிவித்த முன்னோடி. வீரமாமுனிவர் தன் காப்பியத்தில் இவருக்குக் கருணையன் என்று பெயரிட்டுள்ளார். கருணையன் தன் தாயார் எலிசபெத் அம்மையாருடன் கானகத்தில் வாழ்ந்து வந்தார். அச்சூழலில் அவருடைய தாய் இறந்துவிட்ட போது கருணையன் அடையும் துன்பத்தில் இயற்கையும் பங்குகொண்டு கலங்கி ஆறுதல் அளிப்பதை இப்பாடல்கள் படம்பிடித்துக் காட்டுகின்றன.

TNPSC Old Questions
பொதுத்தமிழ்

கிறிஸ்துவின் வருகையை அறிவித்த முன்னோடி (CCSE4GT/2024)

அ) **அருளப்பன்** ஆ) யோவான்
இ) சந்தாசாகிப் ஈ) சன்னியாசி
உ) விடை தெரியவில்லை

எலிசபெத்து அம்மையார் அடக்கம், கருணையன் கண்ணீர்

பூக்கையைக் குவித்துப் பூவே
  புரிவொடு காக்கென்று அம்பூஞ்
சேக்கையைப் பரப்பி இங்கண்
  திருந்திய அறத்தை யாவும்
யாக்கையைப் பிணித்தென்று ஆக
  இனிதிலுள் அடக்கி வாய்ந்த
ஆக்கையை அடக்கிப் பூவோடு
  அழுங்கணீர் பொழிந்தான் மீதே. 2388

வாய்மணி யாகக் கூறும்
  வாய்மையே மழைநீ ராகித்
தாய்மணி யாக மார்பில்
  தயங்கியுள் குளிர வாழ்ந்தேன்
தூய்மணி யாகத் தூவும்
  துளியிலது இளங்கூழ் வாடிக்
காய்மணி யாகு முன்னர்க்
  காய்ந்தெனக் காய்ந்தேன் அந்தோ. 2400

விரிந்தன கொம்பில் கொய்த
  வீயென உள்ளம் வாட
எரிந்தன நுதிநச்சு அம்புண்டு
  இரும்புழைப் புண்போல் நோகப்
பிரிந்தன புள்ளின் கானில்
  பெரிதழுது இரங்கித் தேம்பச்
சரிந்தன அசும்பில் செல்லும்
  தடவிலா தனித்தேன் அந்தோ! 2401

உய்முறை அறியேன்; ஓர்ந்த
  உணர்வினொத்து உறுப்பும் இல்லா
மெய்முறை அறியேன்; மெய்தான்
  விரும்பிய உணவு தேடச்
செய்முறை அறியேன்; கானில்
  செல்வழி அறியேன்; தாய்தன்
கைமுறை அறிந்தேன் தாயும்
  கடிந்தெனைத் தனித்துப் போனாள். 2403

இயற்கை கொண்ட பரிவு

நவமணி வடக்க யில்போல்
  நல்லறப் படலைப் பூட்டும்

தவமணி மார்பன் சொன்ன
தன்னிசைக்கு இசைகள் பாடத்
துவமணி மரங்கள் தோறும்
துணர்அணிச் சுனைகள் தோறும்
உவமணி கானம்கொல் என்று
ஒலித்து அழுவ போன்றே. 2410

பாடலின் பொருள்

கருணையன், தன் மலர் போன்ற கையைக் குவித்து, "பூமித்தாயே! என் அன்னையின் உடலை நீ அன்போடு காப்பாயாக" என்று கூறி, குழியினுள் அழகிய மலர்ப்படுக்கையைப் பரப்பினான். இவ்வுலகில் செம்மையான அறங்களையெல்லாம் தன்னுள் பொதிந்து வைத்து, பயனுள்ள வாழ்க்கை நடத்திய தன் அன்னையின் உடலை, மண் இட்டு மூடி அடக்கம் செய்து, அதன்மேல் மலர்களையும் தன் கண்ணீரையும் ஒரு சேரப் பொழிந்தான்.

"என் தாய், தன் வாயாலே மணிபோலக் கூறும் உண்மையான சொற்களையே மழைநீராக உட்கொண்டு, அத்தாயின் மார்பில் ஒரு மணிமாலையென அசைந்து, அழகுற வாழ்ந்தேன். ஐயோ! இளம்பயிர் வளர்ந்து முதிர்ந்து நெல்மணிகளைக் காணும் முன்னே தூய மணிபோன்ற தூவும் மழைத்துளி இல்லாமல் வாடிக் காய்ந்துவிட்டதைப்போல, நானும் இப்போது என் தாயை இழந்து வாடுகின்றேனே!"

"என் மனம் பரந்து நின்ற மரக்கிளையிலிருந்து பறிக்கப்பட்ட மலரைப்போல வாடுகிறது. தீயையும் நஞ்சையும் முனையில் கொண்ட அம்பினால் துளைக்கப்பட்டதால் உண்டான, புண்ணின் வலியால் வருந்துவது போன்றது என் துயரம். துணையைப் பிரிந்த ஒரு பறவையைப்போல நான் இக்காட்டில் அழுது இரங்கி வாடுகிறேன்; சரிந்த வழுக்கு, நிலத்திலே, தனியே விடப்பட்டுச் செல்லும் வழி தெரியாமல் தவிப்பவன் போல் ஆனேன்."

"நான் உயிர்பிழைக்கும் வழி அறியேன்; நினைந்து கண்ட அறிவினுக்குப் பொருந்தியவாறு உறுப்புகள் இயங்குதல் இல்லாத இந்த உடலின் தன்மையை அறியேன்; உடலுக்கு வேண்டிய உணவைத் தேடிக் கொணரும் வழிவகைகளை அறியேன்; காட்டில் செல்வதற்கான வழிகளையும் அறியேன்; என் தாய் தன் கையால் காட்டிய முறைகளை மட்டுமே அறிவேன். என்னைத் தவிக்க விட்டுவிட்டு என்தாய் தான் மட்டும் தனியாகப் போய்விட்டாளே!"

நவமணிகள் பதித்த மணிமாலைகளைப் பிணித்ததுபோன்று நல்ல அறங்களை எல்லாம் ஒரு கோவையாக இணைத்த தவத்தையே அணிந்த மார்பனாகிய கருணையன், இவ்வாறு புலம்பிக் கூறினான். அது கேட்டுப் பல்வேறு இசைகளை இயக்கியது போன்று, தேன்மலர்கள் பூத்த மரங்கள் தோறும் உள்ள மணம்வீசும் மலர்களும் மலர்ந்த சுனை தோறும் உள்ள பறவைகளும் வண்டுகளும் அக்காட்டினிலே அழுவன போன்று கூச்சலிட்டன.

பழகு

தமிழ் வளர்த்த சான்றோர்கள்

எட்டாம் வகுப்பு - உரைநடை

வீரமாமுனிவர் (1680-1747)

இத்தாலி நாட்டில் பிறந்த வீரமாமுனிவரின் இயற்பெயர் கான்ஸ்டாண்டின் ஜோசப் பெஸ்கி. இவர், தமது முப்பதாம் அகவையில் சமயத் திருப்பணியாற்ற தமிழகத்துக்கு வந்தார்; ஆங்கிலம், எபிரேயம், கிரேக்கம் ஆகிய மொழிகளை அறிந்திருந்தாலும் தமிழ்மொழியின்பால் பெரிதும் ஈர்க்கப்பட்டார். தமிழ்மொழிப் பற்றினால் 'தைரியநாதர்' என முதலில் சூட்டிக்கொண்ட தம் பெயரைத் தனித்தமிழாக்கி 'வீரமாமுனிவர்' எனச் சூட்டிக் கொண்டார். தமிழ்மொழி பயின்றதோடு தெலுங்கு, வடமொழி முதலிய மொழிகளையும் அவர் கற்றுத் தேர்ந்தார்.

வீரமாமுனிவர் தமிழுக்கு ஆற்றிய தொண்டுகள் பல. இவர், தமிழில் முதன்முதலாகச் சதுரகராதி என்னும் அகரமுதலியை வெளியிட்டார்; தேம்பாவணி என்னும் கிறித்தவக் காப்பியத்தை இயற்றினார்; தமிழ் எழுத்து வரிவடிவத்தைத் திருத்தி, எழுத்துச் சீர்திருத்தம் மேற்கொண்டார்; தொன்னூல் விளக்கம் என்னும் இலக்கண நூலைப் படைத்தார்; கலம்பகம், அம்மானை முதலிய சிற்றிலக்கியங்களை இயற்றினார்; பரமார்த்தகுரு கதை என்னும் நகைச்சுவை நூலை எழுதினார்.

"தேம்பாவணி, காவலூர்க்கலம்பகம் கதம்ப மாலையாகக் காட்சியளிக்கின்றது; தொன்னூல் பொன் நூலாக இலங்குகின்றது; சதுரகராதி முத்தாரமாக மிளிர்கின்றது; வீரமாமுனிவர் தமிழ் முனிவர்களுள் ஒருவராக விளங்குகின்றார்" எனச் சொல்லின் செல்வர் இரா.பி.சேதுப்பிள்ளை வீரமாமுனிவருக்குப் புகழாரம் சூட்டினார்.

தமிழைத் தாய்மொழியாகக் கொண்டிராதவர் வீரமாமுனிவர். ஆனால், நந்தமிழைக் கற்றுத் தமிழில் இலக்கண இலக்கியங்கள் இயற்றித் தமிழுக்கு மாபெரும் தொண்டாற்றியுள்ளார். இவர் ஆற்றிய தமிழ்த்தொண்டும் மாறாத் தமிழ்ப்பற்றும் தமிழுள்ளவரை தமிழ் உள்ளங்களில் மணம் பரப்பிக் கொண்டிருக்கும்.

TNPSC Old Questions
பொதுத்தமிழ்

வீரமாமுனிவர் தமிழ் எழுத்துகளின் எவ்வடிவுத்தைத் திருத்தி எழுத்துச் சீர்திருத்தம் மேற்கொண்டார்? (CCS2T-2022)

அ) செய்யுள் வடிவம் ஆ) ஒலி வடிவம்
இ) வரி வடிவம் ஈ) நாடக வடிவம்
உ) விடை தெரியவில்லை

தமிழில் சதுரகராதி என்னும் அகரமுதலியை வெளியிட்டவர் (CCS4T-2019)

அ) ஜி.யு.போப் ஆ) வீரமாமுனிவர்

இ) H.A. கிருஷ்ணனார் ஈ) ரா.பி. சேது

'பரமார்த்த குரு கதை' என்னும் நகைச்சுவை நூலை எழுதியவர் (JICGT-2019)
அ) ஜி.யு.போப் ஆ) ரா.பி.சேதுப்பிள்ளை
இ) வீரமாமுனிவர் ஈ) ஆறுமுகநாவலர்

முதன்முதலாகச் சதுரகராதி என்னும் அகரமுதலியை வெளியிட்டவர் யார்? (EO4GT-2019)
அ) குணங்குடி மஸ்தான் சாகிபு
ஆ) ஆறுமுக நாவலர்
இ) வீரமாமுனிவர்
ஈ) ரா.பி.சேது

'வீரமாமுனிவர் தமிழ் முனிவர்களுள் ஒருவராக விளங்குகின்றார்' எனப் புகழ்ந்தவர் யார்? (JGT-19)
அ) பரிதிமாற்கலைஞர் **ஆ) ரா.பி.சேது**
இ) ந.மு.வேங்கடசாமி ஈ) வையாபுரி

வீரமாமுனிவர் பிறந்த நாடு (SABT-2017)
அ) பாரிசு **ஆ) இத்தாலி**
இ) இங்கிலாந்து ஈ) சுவிச்சர்லாந்து

வீரமாமுனிவர் தமது எத்தனை வயதில் தமிழகம் வந்து தமிழ் படித்து காப்பியம் படைத்தார் (HC2GST16)
அ) நாற்பது **ஆ) முப்பது**
இ) இருபது ஈ) அறுபது

தமிழ் எழுத்துகளில் ஒரு நல்ல சீர்திருத்தத்தினைக் கொணர்ந்தவர் யார்? (GROUP 4 - 2013)
அ) வேதநாயகம் ஆ) வீரமாமுனிவர்
இ) எச்.ஏ.கிருட்டிணனார் ஈ) உ.வே.சாமிநாதர்

விடைத்தேர்க:
வீரமா முனிவர் இயற்றியுள்ள ஐந்திலக்கணங்களைக் கூறும் இலக்கண நூல் எது? (GT112-2013)
அ) முதுமொழி மாலை ஆ) செந்தமிழ் இலக்கணம்
இ) கொடுந்தமிழ் இலக்கணம் **ஈ) தொன்னூல் விளக்கம்**

வீரமாமுனிவர் தமிழ் முனிவர்களுள் ஒருவராக விளங்குகின்றார் என்று கூறியவர் யார்? (SSGT-2013)
அ) ரா.பி. சேது ஆ) குணங்குடி மஸ்தான் சாகிபு
இ) ஆறுமுக நாவலர் ஈ) பரிதிமாற்கலைஞர்

பழகு

தேம்பாவணி

எட்டாம் வகுப்பு - செய்யுள்

வீரமாமுனிவர்

இயற்பெயர்	:	கான்ஸ்டாண்டின் ஜோசப் பெஸ்கி
பெற்றோர்	:	கொண்டல் போபெஸ்கி - எலிசபெத்
பிறந்த நாடு	:	இத்தாலி
அறிந்த மொழிகள்	:	இத்தாலியம், இலத்தீன், கிரேக்கம், எபிரேயம், தமிழ், தெலுங்கு, சமற்கிருதம்
சிறப்பு	:	முப்பதாம் வயதில் தமிழகம் வந்து தமிழ் பயின்று காப்பியம் படைத்தமை
இயற்றிய நூல்கள்	:	ஞானோபதேசம், பரமார்த்த குரு கதை, திருக்காவலூர்க் கலம்பகம், தொன்னூல் விளக்கம், கித்தேரியம்மாள் அம்மானை.
காலம்	:	08.11.1680 முதல் 04.02.1747 வரை.

தேம்பாவணி

- தேம்பாவணி - தேம்பா + அணி - வாடாத மாலை; தேம்பாவணி - தேன் + பா + அணி - தேன்போன்ற இனிய பாடல்களாலான மாலை.
- இந்நூல், இயேசு பெருமானின் வளர்ப்புத் தந்தையாகிய சூசையப்பரைத் தலைவராகக்கொண்டு பாடப்பட்டது.
- இந்நூல், கிறித்தவச் சமயத்தாரின் கலைக்களஞ்சியம் என அழைக்கப்படுகிறது.
- இந்நூலில் மூன்று காண்டங்களும், முப்பத்தாறு படலங்களும் உள்ளன; பாடல்களின் எண்ணிக்கை மூவாயிரத்து அறுநூற்றுப் பதினைந்து. 3615

TNPSC Old Questions
பொதுத்தமிழ்

கிறித்துவ சமயத்தாரின் கலைக்களஞ்சியம் என்றழைக்கப்படும் நூல் எது? (AJGST-2019)
அ) சதுரகராதி **ஆ) தேம்பாவணி**
இ) வேதியர் ஒழுக்கம் ஈ) இரட்சணிய யாத்திரிகம்
உ) விடை தெரியவில்லை

மகவருள் படலம்

நகைசெய் தன்மையி னம்பெழி இத் தாய்துகள்
பகைசெய் நெஞ்சமும் பற்றலு மொன்றுற
முகைசெய் மேனி தழுவிமுத் திட்டலுங்
குகைசெய் யின்பெழக் கோலமிட் டொத்ததே.

- வீரமாமுனிவர்.

பொருள் :
குழந்தை இயேசு புன்னகை பூத்தார். அதனைக் கண்ட தாய் மரியாளின் மனத்தில் மகிழ்ச்சி பொங்கி எழுந்தது. தீவினையைப் பகைத்த தன்நெஞ்சத்தில் ஆர்வமும் மகிழ்ச்சியும் கலந்து, பூப்போன்ற மேனியுடைய திருமகனை அணைத்து முத்தமிட்டாள். இக்காட்சி அன்பு மேலிடக் குகையொன்று குனிந்து கோலமிட்டது போலிருந்தது.

புத்தகப் பயிற்சி வினாக்கள்

வீரமாமுனிவரின் இயற்பெயர்
அ) ஜான் ஹென்றி
ஆ) ஜியார்ஜ் யுக்ளோ போப்
இ) கான்ஸ்டாண்டின் ஜோசப் பெஸ்கி
ஈ) ராபர்ட் டி நொபிலி

விடை : இ)

வீரமாமுனிவர் ________ நாட்டைச் சார்ந்தவர்.
அ) இத்தாலி ஆ) ஜெர்மனி
இ) பிரான்சு ஈ) ஸ்பெயின்

விடை : அ)

புத்தகப் பயிற்சி வினாக்கள்

தனித்தமிழுக்கு வித்திட்டவர் ________
அ) கால்டுவெல் ஆ) பரிதிமாற்கலைஞர்
இ) மறைமலையடிகள் ஈ) தேவநேயப்பாவாணர்

விடை : ஆ)

சென்னையில் ________ பெயரில் நூலகம் உள்ளது.
அ) திரு.வி.க. ஆ) பரிதிமாற்கலைஞர்
இ) கால்டுவெல் ஈ) பாவாணர்

விடை : ஈ)

மதுரையில் உலகத்தமிழ் மாநாடு நடைபெற்ற ஆண்டு
அ) 1968 ஆ) 1972
இ) 1981 ஈ) 1992

விடை : இ)

பாவாணர் அரசின் உதவியோடு ________ அகரமுதலியை வெளியிட்டார்.
அ) கலைச்சொல் ஆ) அறிவியல் கலைச்சொல்
இ) தனித்தமிழ் ஈ) சொற்பிறப்பியல்

விடை : ஈ)

'மன்னிப்பு' - இச்சொல்லுக்குரிய தமிழ்ச்சொல் யாது?

விடை : பொறுத்துக்கொள்

தமிழின் தொன்மையை உலகறியச் செய்தவர் யார்?

விடை : கால்டுவெல்

தமிழை ஆலென வளர்த்து மாண்புறச் செய்தவர் யார்?

விடை : தேவநேயப்பாவாணர்

புத்தகப் பயிற்சி வினாக்கள்

பள்ளிப்பறவைகள் என்னும் நூல் ________ பிரிவாக அமைந்துள்ளது.
அ) இரண்டு ஆ) நான்கு
இ) ஆறு ஈ) மூன்று

விடை : ஈ)

'மன்னும் சிலம்பே மணிமே கலைவடிவே
முன்னும் நினைவால் முடிதாழ வாழ்த்துவமே'-
இவ்வடிகளில் இடம்பெற்றுள்ள காப்பியங்களைத் தவிர எஞ்சியுள்ள ஐம்பெருங் காப்பியங்களின் பெயர்களை எழுதுக

விடை :
சீவக சிந்தாமணி, வளையாபதி, குண்டலகேசி

ஜி.யு.போப்

புதுசு

ஜி.யு.போப் (1820 - 1908)

மேல்நிலை முதலாம் ஆண்டு - சா.சி

- செந்தமிழ்ச் செம்மல் டாக்டர் ஜி.யு.போப், 1839 ஆம் ஆண்டில் தென்னிந்தியாவுக்கு வந்தார்.
- சென்னையை அடைந்த போப், 'சாந்தோம்' என்னும் இடத்தில் முதன் முதலாகத் தமிழ் உரையைப் படித்துச் சொற்பொழிவாற்றினார்.
- ஆங்கிலேயரான அவரின் தமிழுரை கூடியிருந்த தமிழர்களுக்குப் பெருவியப்பளித்தது.
- தமிழ் மொழியைப் பயிலத்தொடங்கிய சிறிது காலத்திலேயே, ஐரோப்பியரும் படித்துப் பயன்பெற வேண்டுமென்ற எண்ணத்தில், தமிழ் நூல்களை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்ததாகக் குறிப்பிட்டுள்ளார்.
- இவரது திருக்குறள், திருவாசக ஆங்கில மொழிபெயர்ப்புகள் சிறப்பு வாய்ந்தவை.
- போப் அவர்கள் தஞ்சாவூரில் வாழ்ந்தபோது, தமிழ் இலக்கிய இலக்கணங்களைத் தெளிவுற அறிந்தார். அப்போதுதான் தொல்காப்பியம், நன்னூல் முதலிய பேரிலக்கண நூல்களைப் பாடசாலை மாணவர் படிப்பது எளிதன்று என்பதைக் கண்டு, சிறிய தமிழ் இலக்கண நூல்கள் சிலவற்றை எழுதி வெளியிட்டார்.
- ஐரோப்பியர், தமிழ் மொழியைக் கற்றுக் கொள்வதற்குரிய நூல் ஒன்றை (Tamil Hand Book) எழுதினார்.
- ஆங்கிலத்தில் எழுதப் பெற்றிருந்த தமிழ்நாட்டு வரலாற்றை தமிழில் எழுதிப் பதிப்பித்தார்.
- பள்ளிக்கூடங்களில் பயிலும் மாணவர்கள், தமிழ்மொழி வழியாகவே அனைத்துத் துறைக் கல்வியையும் பெறுதலே முறையானதென்றும் அத்தகைய கல்வியே பயனளிக்குமென்றும் போப் கருதினார்.
- எழுபது ஆண்டுகள் தமிழோடு வாழ்ந்திருந்து, தமிழுக்கு நலம் செய்த பெரியார் ஜி.யு.போப் ஆவார்.

பழசு

தேம்பாவணி

மேல்நிலை இரண்டாம் ஆண்டு- செய்யுள்

வீரமாமுனிவர்

- வீரமாமுனிவர் கொன்ஸ்டான் ஜோசப்பெஸ்கி என்னும் இயற்பெயரையுடையவர்.
- கொன்ஸ்டான் என்னும் இத்தாலி மொழிச் சொல்லுக்கு அஞ்சாமை என்பது பொருள்.
- இவர் தம் பெயரைத் தைரியநாதசாமி என்று மாற்றிக் கொண்டார்.
- தமிழ்ச்சான்றோர் இவரை வீரமாமுனிவர் என்று அழைத்தனர்.
- 1710 ஆம் ஆண்டு தமிழ்நாட்டிற்கு வந்த இப்பெரியார் முப்பத்தேழாண்டுகள் சமயப் பணியுந் தமிழ்ப் பணியும் புரிந்து 1747 ஆம் ஆண்டில் அம்பலக்காடு என்னும் இடத்தில் இயற்கை எய்தினார்.
- வீரமாமுனிவரின் தமிழ்ப்பணிகள் என்றும் நினைக்கற்பாலன. சிற்றிலக்கியங்கள், உரைநடை, அகராதி, மொழிபெயர்ப்பு, இலக்கணம், பெருங்காப்பியம் என்று தமிழிலக்கிய வரலாற்றில் அவரது பங்களிப்பு நிலைபேறுடையதாக விளங்குகிறது.
- இவர் திருக்காவலூர்க் கலம்பகம், கித்தேரியம்மாள் அம்மானை, வேதியர் ஒழுக்கம், பரமார்த்த குருகதை, செந்தமிழ் இலக்கணம், கொடுந்தமிழ் இலக்கணம், தொன்னூல் விளக்கம், சதுரகராதி முதலிய நூல்களையும் இயற்றியுள்ளார்.
- திருக்குறளின் அறத்துப்பால் பொருட்பால் இரண்டனையும் வீரமாமுனிவர் இலத்தீன் மொழியில் மொழிப்பெயர்த்துள்ளார்.

TNPSC Old Questions
பொதுத்தமிழ்

திருக்குறளின் அறத்துப்பால், பொருட்பால் இரண்டையும் இலத்தீன் மொழியில் மொழிபெயர்த்தவர் யார்? (CCS2T-2018)

அ) ஜி.யு.போப் **ஆ) வீரமாமுனிவர்**
இ) பவணந்தி முனிவர் ஈ) கால்டுவெல்

திருக்குறளின் அறத்துப்பால், பொருட்பால் இரண்டனையும் வீரமாமுனிவர் இந்த மொழியில் மொழிபெயர்த்தார் (HC2GST16)

அ) இலத்தீன் ஆ) பிரெஞ்சு
இ) ஜெர்மன் ஈ) ஸ்பானிஷ்

திருக்குறளின் அறத்துப்பால், பொருட்பால் ஆகியவற்றை வீரமாமுனிவர் மொழிபெயர்த்து தந்த மொழி (G2AT16)

அ) ஆங்கில மொழி **ஆ) இலத்தீன் மொழி**
இ) வடமொழி ஈ) பிரெஞ்சு மொழி

புத்தகப் பயிற்சி வினாக்கள்

வீரமாமுனிவரின் தாய்நாடு

அ) தமிழகம் ஆ) பிரான்சு
இ) இத்தாலி ஈ) ஜெர்மனி

விடை : இ)

கொன்ஸ்டான் என்னுஞ் சொல்லுக்குப் பொருள்

அ) கொன்றவன் ஆ) அஞ்சாதவன்
இ) வேற்றுநாட்டவன் ஈ) மாவீரன்

விடை : ஆ)

வீரமாமுனிவர் தொகுத்த அகராதி

அ) சதுரகராதி ஆ) பேரகராதி
இ) அரும்பத அகராதி ஈ) சொல்லகராதி

விடை : அ)

திருக்குறளின் அறத்துப்பால், பொருட்பால் ஆகியவற்றை வீரமாமுனிவர் மொழிபெயர்த்துத் தந்தது

அ) ஆங்கில மொழியில்

ஆ) இலத்தீன் மொழியில்

இ) வடமொழியில்

ஈ) பிரெஞ்சுமொழியில்

விடை : ஆ)